ISSN 1391-9504


# விஜய்

Vijey விஜய்

17.11.2010 - மலர் 07, இதழ் 37




## புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்



## உலகப் புகழ் ஓவியர் பபிலோ பிகாசோ

## பிரபஞ்சத்தின் ஆயுள் 370 கோடி ஆண்டுகள்?



## மாணவர்களுக்கும் பயன்படும் யோகாசனம்



## விலங்குகள், பறவைகளின் உணவு முறைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒல்லாந்தர்கள் வன்னியிலிருந்து யானைகளை வன்னித் தலைவர்கள் மூலம் கப்பமாக பெற்றுக் கொண்டனர். இந்தக் கப்பத்தைப் பெறுவது அன்று மிகவும் சிரம மான காரியமாகவே இருந்தது. வன்னித் தலைவர்கள் கப்பம் வழங்குவதிலிருந்து பின்வாங்கினர். பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் சிரமங்களையும் கூறினர். ஒருமுறை ஒல்லாந்தர்களின் பிடியிலிருந்து தப்பி கண்டி மன்னனிடம் பாதுகாப்புக் கோரி அங்கு செல்ல வன்னித் தலைவர்கள் முயற்சித்தனர். சிலர் அவ்வாறு சென்றனர். மன்னன் அவ்வாறு வந்தவர்களைப் பாதுகாப்புடன் வைத்துக்கொண்டான்.

எனினும், ஒல்லாந்தரால் மூடப்பட்ட துறைமுகங்களை திறக்க வைப்பதற்கு எண்ணிய மன்னன் அவர்களின் மனதை வெல்ல வேண்டுமெனச் சிந்தித்தான். அடைக்கலம் கேட்டு வந்த வன்னித் தலைவர் களை கண்டி மன்னன் விலங்கிட்டு ஒல்லாந்தரிடம் கையளித்தான். அதன்பின் ஒல்லாந்தர்கள் இந்த வன்னித் தலைவர்களை நியமித்தனர்.

## முத்துக்குளித்தலுக்கு வரி

ஒல்லாந்த வர்த்தக சங்கம் அடிக்கடி முத்துக்குளிக்கும் தளங்களைப் பரிசோதித்து முத்துக்குளித்தல் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும் பொருட்டு ஆணையாளரை அனுப்பி வைத்தது.

ஒவ்வொரு முத்துக்குளிப்போரும் கடலின் அடித்தளத்தில் இறங்குவ தற்காக ஒவ்வொரு பகுதியை ஒதுக் கினர். முத்துக்குளிப்போரின் தொகைக்கேற்ப அதற்குரிய பகுதி களும் இருந்தன. இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் வர்த்தக சங்கம் வரி அறவிட்டது. கிறிஸ்தவ முத்துக்குளிப் பவர் ஒருவர் எந்தளவு முத்துக்கள் எடுத்தாலும் நாளொன்றிற்கு 60 பணம் கொடுக்க வேண்டும். இஸ்லா மியர் ஒருவருக்கு இதற்காக இரண்டு மடங்கு பணம் அறவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒழுக்கமுள்ள பல்கலைக்கழக சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்"

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களில் ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பவே குற்றம் இழைக்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதே தவிர, தனிப்பட்ட காரணங்களுக்காக அன்று என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



அண்மையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பத்தாவது பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; "பல்கலைக்கழக மாணவர்களின் முறைப்பாடுகளை நாமறிவோம். அதனை நிவர்த்தி செய்ய வேண்டியது எமது கடமையாகும். மாறாக, பல்கலைக்கழக நிர்வாகத்தை மாணவர்களிடம் ஒப்படைக்க முடியாது. எனவே, பல்கலைக்கழக நடவடிக்கைகளை சீர்குலைக்கின்றவர்களுக்கு தண்டனைகளை வழங்குகின்றோம். இதன்மூலம் ஒழுக்கமுள்ள பல்கலைக்கழக சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்" என்றார்.

அத்துடன், உலகிலுள்ள 1000 பல்கலைக்கழகங்களின் பட்டியலுக்குள் எமது நாட்டுப் பல்கலைக்கழகங்களையும் உள்ளீர்ப்போம் என்றும் இதனை ஐந்து வருடங்களுக்குள் நிறைவேற்ற உள்ளதாகவும் குறித்த வைபவத்தில் உரையாற்றிய உயர் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். பிந்திக் கிடைப்பவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.

# பாடசாலைகளில் துரித உணவுகள் விற்கத் தடை



நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க /தனியார் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட துரித உணவு வகைகள் (Fast food) மற்றும் இனிப்புச் சுவை கலந்த பான வகைகளும் விற்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவு வகைகள், பானங்கள் ஆகியனவற்றினால் இளவயதினர் நீரிழிவு, இளைப்பு நோய், பல் கோளாறுகள் போன்ற பல்வேறு நோய்களுக்கு ஆளாவதாக சுகாதாரத்துறை பிரதி அமைச்சரினால் கல்வித்துறை அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்தே கல்வி அமைச்சு மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, மேற்படி தடைவிதிப்பு உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பதைக் கண்காணிப்பதற்காக விசேட திடீர் கண்காணிப்புக் குழுவினர் சோதனைகளில் ஈடுபடுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 514 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர்

## 612 பேர் தாயை அல்லது தந்தையை இழந்தவர்களாக உள்ளனர்



**வடக்கில் 514 சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்தவர்களாக உள்ளனர் என வட மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாகவே, இந்த சிறுவர்கள் தமது பெற்றோரை இழக்க நேரிட்டுள்ளது. இதுதவிர, தமது தாயை அல்லது தந்தையை இழந்த சிறுவர்கள் 612 பேர் இருப்பதாகவும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.**

# அரசாங்கப் பாடசாலைகளில் மும்மொழிக் கல்வித்திட்டம்

நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் மும்மொழிக் கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 1000 அரசாங்கப் பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளதாகவும் இப்பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் தரம் 6 தொடக்கம் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனூடாக, மாணவர்கள் நாட்டின் சகல சமூகத்தினருடனும் நல்லுறவைப் பேணுவதற்கு வழிவகுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# யாழ். பாடசாலைகளில் தேசிய மாணவர் படையணி

யாழ்.மாவட்டத்திலுள்ள 25 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் தேசிய மாணவர் படையணிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருந்த 'கெடேட்' படையணிக்கு மாற்றீடாகவே இந்த 'தேசிய மாணவர் படையணி' பாடசாலைகளில் அமைக்கப்பட்டு வருகின்றது.

மாணவர் படையணிகளுக்காக மேற்படி பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 பேருக்கு கண்டி ரந்தெனிய தேசிய மாணவர் பயிற்சி முகாமில் அதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. தவிர, அவர்களின் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள பாதுகாப்பு செயலகப் படை அதிகாரிகளும் உரிய பயிற்சிகளை வழங்கி வருவதாகவும், யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

# சூரிய ஆற்றல் 'சார்ஜர்'



அதிகரித்து வரும் தேவைகளுக்கேற்ப உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு குறைவாகவே இருக்கின்றது. இது உலகளவில் எதிர்நோக்கப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும். எனவேதான், இதற்கு மாற்று வழிமுறைகளைக் கையாள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான ஒரு தீர்வுதான் சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவது. இன்றளவில் மின்சாரத்துக்கு மாற்றாக, இயற்கையான சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி இயங்கக்கூடிய பல சாதனங்கள் சந்தைக்கு வந்துவிட்டன. அந்த வரிசையில் தற்போது மின்சாரம் இல்லாமலேயே பயன்படுத்தக்கூடிய புதுமையான 'சார்ஜரும்' அறிமுகமாகியுள்ளது.

இது சூரிய ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றித் தருகின்றது. பலவிதமான 'Plug'களைப் பொருத்திப் பயன்படுத்தும் வசதியும் இதில் உள்ளது. மேலும், எங்கு சென்றாலும் எளிதில் இதனை எடுத்துச் செல்லவும் முடியும். உதாரணமாக, நீங்கள் கடற்கரைக்குச் செல்லும்போது இந்த சார்ஜரையும் எடுத்துச்சென்று வெயிலில் வைத்தால் போதும். சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தியை மின் ஆற்றலாக மாற்றுவதன் மூலம் உங்களின் கைப்பேசி,கெமரா, ஐபொட் போன்றவற்றை சார்ஜ் செய்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கும் பயன்படும் யோகாசனப் பயிற்சிகள்



**யோகா உடல் ஆற்றலைப் பெருக்கி, உடல் இயக்கங்களையும் சீராக்கி, நோய் தொற்றுக்களையும் கழிவுகளையும் நீக்கி மனிதனை உடல், உள அளவில் சக்தி படைத்தவனாக்குகின்றது.**



நம் முன்னோர் நமக்களித்த பாரம்பரிய செல்வமான யோகாசன முறைகள் தற்போது பல நாடுகளிலும் மிகவும் பிரபலமாகி வருகின்றன. முறையான யோகாசனப் பயிற்சிகள் உடலுக்கு இளமையூட்டி காலத்திற்கு முந்திய மூப்பினைத் தடுத்து, வாழ்நாள் முழுவதும் ஆரோக்கிய வாழ்வு நல்கும் தன்மை கொண்டதென்பதை அறிந்துகொள்ளலாம். நலம் தரும் யோகாசனப் பயிற்சிகளை தகுதியான ஆசிரியரிடம் பயின்று பயிற்சி பெறுவதே நன்மை பயக்கும்.

பிற வகையான உடற் பயிற்சிகளில் உடலின் வெளிப்புறத் தசைகளை மட்டுமே செழிப்படையச் செய்கின்றன. ஆனால், யோகாசனப் பயிற்சிகள் நமது நரம்பு மண்டலம், இரத்த ஓட்டம், ஜீரணம், சுவாசம் மற்றும் உடலின் சுரப்பிகள் ஆகியவற்றின் பணிகளை மேம்படுத்தி நமக்கு வளமான சுக வாழ்வை அளிக்கின்றன. இதுவே யோகாசனப் பயிற்சிகளை பிறவகை உடற் பயிற்சிகளிலிருந்து வேறுபடுத்துவதாகும். உடலின் வெளித்தோற்றத்தை மட்டுமே வளர்க்கும் உடற்பயிற்சிகளைவிட, நம் உள்ளுறுப்புக்கள் மற்றும் மனதின் ஆரோக்கிய நிலையை மேம்படுத்தும் யோகாசனப் பயிற்சிகளே மனித வாழ்விற்கு வளமூட்டுபவை. இளமையிலேயே இதனைப் பயின்று பழகி வந்தால் பல நன்மைகள் உண்டாவதை அறியலாம். உணவுக் கட்டுப்பாடு, உள்ளக் கட்டுப்பாடு முதலிய நற்பழக்கங்கள் எம்மை மனிதருள் தேவராக்கும். இன்னும் நினைவாற்றல் மிகுந்து எல்லையில்லாத அளவில் கல்வித் தரம் உயரும். கல்வி உயரக் கலை உயரும். கலை உயர தொழில் உயரும். தொழில் உயர நாடு உயரும் நாடு உயர நாமும் உயர்ந்து நல்லவராவோம்.



ஒவ்வொரு மனிதனும் உடல், மனம், ஆன்மா என்ற மூன்று விதங்களில் கட்டமைக்கப்பட்டுள்ளான். இம்மூன்றையும் இணைத்து, மனிதன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்ள முயலும்போது, உடல் அளவிலும் மனதளவிலும் ஆன்ம அளவிலும் உயர் நிலையை அடைகின்ற பயிற்சியே யோகா.



யோகா உடல் ஆற்றலைப் பெருக்கி மனிதனுடைய அனைத்து உடல் இயக்கங்களையும் சீராக்கி அதில் இருக்கின்ற நோய் தொற்றுக்களையும் கழிவுகளையும் வெளியேற்றி விடுகிறது. அதன்மூலம் மனிதன் உடல் அளவிலும் மன அளவிலும் மிகுந்த சக்தி படைத்தவனாகிறான்.

மனிதன் மெல்ல மெல்ல ஓர் இயந்திரமாக மாறிக்கொண்டு வருகிறான். நவீனத் தின்பால் அடிமையாகிக்கொண்டு வருகிற அவன், அவற்றின் தயவில் தன் வாழ்நாளில் இரண்டு மூன்று வருடங்கள் நீட்டித்துக்கொண்டு மறுபடியும் தன் ஞானமற்ற வாழ்வை வாழ்கிறான். இந்நிலையை மாற்றத்தான் மனிதனுக்கு யோகா தேவைப்படுகிறது.

**எனவே, மாணவப் பருவத்தில் இருப்பவர்களும் தமது சுய ஆளுமையின்மூலம் கற்றல் திறனை அதிகரிப்பதற்குப் பயன்படுகின்ற யோகக்கலையைப் பயில்வதன் அவசியத்தை உணர்த்தும் நோக்கில் யோகக் கலைப் பயிற்சிகளின் ஆசனப் படிமுறைகள் சிறு தொகுப்புக்களாக பட விளக்கங்களுடன் வாரம்தோறும் வழங்கப்படவுள்ளன. அடுத்த வாரம் அதன் முதல் பாகத்தைப் பார்க்கலாம்.**

# புதிய குரங்கினம் கண்டுபிடிப்பு



கொலம்பியா தென் அமெரிக்க பிராந்தியத்தில் உள்ள ஒரு நாடாகும். 'அமேசன்' காடுகளின் ஒரு பகுதி இந்நாட்டிற்குரியது. இந்த வனாந்தரப் பிரதேசத்தில் புதிய குரங்கினமான 'டிடி' (Titi) என்ற குரங்கு இனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. கொலம்பிய தேசிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர் குழுவொன்று மேற்கொண்ட ஆராய்ச்சியின்போதே, இந்தக் குரங்கினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பூனையின் அளவையொத்த இந்தக் குரங்கினம் 'கோலிஸ்புஸ் கெகெடெனிஸ்' (Callicebus Caquetensis) என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

இந்தக் குரங்கினம் தொடர்பாக, உயிரியல் ஆய்வு விஞ்ஞானிகள் கேள்விப்பட்டிருந்த போதும் அதுபற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறிவது கடினமானதாக இருந்தது. இந்தக் குரங்கினம் தற்போது அழிந்து வரும் இனங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இதற்குக் காரணம் காடுகள் அழிக்கப்படுவதாகும்.

ஆராய்ச்சியாளர்கள் கருத்தின்படி, இந்த இனத்தைச் சேர்ந்த 250 இற்கும் குறைவான குரங்குகளே அங்கு வாழ்வதாக கணிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் குரங்கினம் ஈக்வடோர் மற்றும் பேரு ஆகிய நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள ஈர்வலய 'அமேசன்' வனாந்தரப் பகுதிகளிலும் வாழ்கின்றன.



கொலம்பிய தேசிய பல்கலைக் கழகத்தின் உயிரியல் பரிணாமம் தொடர்பான விஞ்ஞானியான மொய்னிஹான் இந்த வகைக் குரங்கினம் இதற்கு முன்னர் 1980 ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகின்றார். ஆனாலும், கொலம்பியாவில் நடைபெற்று வரும் வன்முறைகள் காரணமாக காடுகளுக்குள் சென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

ஸ்பானிய மொழியில் 'டிடி' ரகக் குரங்குகள் 'மென்மை, மென்மை' என்றழைக்கப்படுகின்றன. இந்தக் குரங்கினம் தமது வாழ்விட எல்லைப்பகுதியை அடையாளப்படுத்தப் புதுமையான ஒலியை எழுப்புகின்றது. மிருக இனங்களில் அபூர்வமாக ஒலி எழுப்பக்கூடிய ஒருவகை மிருக இனமாக இந்தக் குரங்கினம் கருதப்படுகின்றது.

"நாம் இந்த 'டிடி' குரங்குகள் பற்றிக் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால், அவை உண்மையாகவே வாழ்கின்றனவா? என்று அறிந்திருக்கவில்லை. அத்துடன், அவை எப்படிப்பட்ட உருவ அமைப்பை உடையவை என்றும் உறுதிப்படுத்த முடியாதிருந்தோம். இப்போது அவைபற்றி அறிந்துகொண்டுள்ளோம். இந்த மிருகங்களைக் கண்டுபிடிக்க முடிந்தமை உயிரியல் பல்லினத் தன்மையின் சிறந்த உதாரணமாகும். பிரமாண்டமான காடுகளில் இதுபோன்று இன்னும் கண்டுபிடிக்கப்படாத எத்தனையோ வகையான உயிரினங்கள் இருக்கலாம்" என்று தோமஸ் டெப்லர் என்பவர் பிரய்மேட் கொன்சவேசன் என்ற சஞ்சிகைக்கு தெரிவித்துள்ளார்.

'இந்த வகைக் குரங்கினம் 250 அளவிலேயே இருப்பதோடு, இன்னும் எவ்வளவு காலத்திற்கு அவை உயிர்வாழும் என்று சொல்ல முடியாதுள்ளது' என்றும் அவர் தெரிவித்தார்.




**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாள்; இதுதான்

# ஹஜ்ஜுப் பெருநாள்



**தியாகத்தையும் இறையச்சத்தையும் பிரதானமாகப் பிரதிபலித்துக் கொண்டாடப்படும் ஒரு திருநாள்தான் இந்த ஹஜ்ஜுப் பெருநாள். அல்லாஹ் தனது அடியார்களுக்கு இவ்வுலகில் இரண்டு திருநாட்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். அதில் ஒன்று; 'ஈதுல் ஃபித்ர்' எனும் 'ஈகைத் திருநாள்' (நோன்புப் பெருநாள்). மற்றையதுதான், 'ஈதுல் அழ்ஹா' எனும் இந்த தியாகத் திருநாள்.**

துல்ஹஜ் மாதத்தில் இறையில்லமாம் கஃபாவைத் தரிசிப்பதற்காகவும் விதியாக்கப்பட்டுள்ள ஏனைய ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து வரும் அல்லாஹ்வின் அடியார்கள் வருடாந்தம் ஒன்றுகூடும் ஓர் ஏகத்துவ மாநாடாக ஹஜ் வழிபாட்டினைக் குறிப்பிடலாம். இனத்தால், குலத்தால், நிறத்தால், கலாசாரத்தால், தேசத்தால், அந்தஸ்தால் என வேறுபட்டிருக்கும் அனைத்து முஸ்லிம்களும் இவை எதையும் பொருட்படுத்தாது சமத்துவம் மிக்கவர்களாய் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, இறைஞ்சும் உன்னத வழிபாடுதான் இந்த ஹஜ். இந்த வணக்கத்தின் நிறைவாகவே, ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது. மேலும், நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாக மனப்பான்மையை நினைவுகூருவதற்கான ஒரு நன்னாளாகவும் ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பிக்கப்படுவதோடு, ஒரு சிறந்த வணக்கமாக, ஹஜ் யாத்திரை மிளிர்கின்றது.

## நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகங்களும் ஹஜ்ஜின் ஆரம்பமும்

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தமது வாழ்வின் ஆரம்பகட்டத்திலிருந்தே, அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டும்; அவனைத் தவிர வேறெதனையும் வழிபடக்கூடாது என்ற கொள்கையில் உறுதியாகவே இருந்தார். இதனால், அவர் ஏராளமான எதிர்ப்புகளையும் இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வனைத்து நிலைமைகளின்போதும் அவர் 'அல்லாஹ் ஒருவன்' என்ற தனது ஏகத்துவக் கொள்கையிலிருந்து விடுபடவே இல்லை.


அடுத்த சோதனையாக, திருமணத்தின்பின்னர் தனது மனைவியையும் பல்லாண்டுகளுக்குப் பின்னர் பெற்றெடுத்த குழந்தையையும் மனித சஞ்சாரமற்ற பாலைவனத்தில் விட்டு வரும்படி அல்லாஹ்விடமிருந்து கட்டளை வருகின்றது. உடனே, எதையும் சிந்திக்காது இறை உத்தரவிற்கேற்ப, அதனை அவர் நிறைவேற்றுகின்றார். சிறிதளவு உணவும் நீரும் தனது மனைவியிடம் கொடுத்துவிட்டு வருகின்றார். சிலநாட்களில் அவை தீர்ந்து விடுகின்றன. பசியால் கதறி அழும் குழந்தை இஸ்மாயிலுக்கு நீர் தேடி தாய் ஹாஜரா (றழி) அவர்கள் ஸஃபா-மர்வா ஆகிய இரு குன்றுகளுக்கிடையில் ஓடுகின்றார். இதனைப் பொருந்திக்கொண்ட இறைவன், குழந்தையின் பாதம் படுகின்ற இடத்திலிருந்து என்றும் வற்றாத ஒரு நீரூற்றினை ஏற்படுத்துகின்றான். இதுவே 'ஸம்ஸம்' நீரூற்று.

காலம் கடந்து செல்ல இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு தனது மகனாகிய இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிடுமாறு இறைஉத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. இதனையும் மறுக்காமல் நிறைவேற்ற முன்வருகின்றார் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள். இங்கு இவரின் இறைநேசம், இறைநோக்கம், இறையச்சம் என்பன உறுதியாக நிரூபிக்கப்படுகின்றன. எனவே, இஸ்மாயில் (அலை) அவர்களுக்குப் பதிலாக ஓர் ஆடொன்றைப் பலியிடுமாறு இறைவனிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது. இதனை நினைவுகூருமுகமாகவே ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை அடுத்து 'உழ்ஹிய்யா' எனும் நிகழ்வு அமைகின்றது.

ஆக, நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் தமக்கு வழங்கப்பட்ட அத்தனை சோதனைகளின்போதும் அல்லாஹ்வின் மீது வைத்திருந்த நம்பிக்கையிலிருந்து சற்றும் இளகவில்லை. அல்லாஹ்வின்மீது அளவற்ற பக்தியுடனும் நம்பிக்கையுடனும் அவர் அந்தச் சோதனைகளை எதிர்கொண்டார்; அதில் வெற்றியும் பெற்றார். இவை அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவையாக ஆகிவிட்டதனால், அதனை அடிப்படையாக வைத்து ஹஜ்ஜுப் பெருநாளை ஏற்படுத்திக்கொடுத்தான். வருடந்தோறும் ஹஜ் யாத்திரையின் போது இறையடியார்களால் நிறைவேற்றப்படும் ஹஜ்ஜுக்குரிய கடமைகளும் இந்த சம்பவங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

எனவே, ஹஜ் பெருநாள் மற்றும் ஹஜ் கிரியைகளின் பின்னால் எமக்குரிய ஏராளமான படிப்பினைகள் பொதிந்திருக்கின்றன. குறிப்பாக; துன்பங்கள், சோதனைகள் நேரும் போது வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளாது அல்லாஹ்வின்மீது அளவற்ற பக்திகொண்டு- அவனைத் தொழுது-அவனிடம் பிரார்த்தனைகளைச் செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா நிச்சயம் நமது பிரார்த்தனைகளை அங்கீகரித்து அருள் புரிவான். அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்.

-ஈத் முபாரக்-



## ஹஜ் தரும் படிப்பினைகள் சில...

**ஹஜ் வணக்கம், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகியன எமக்கு ஏராளமான படிப்பினைகளைத் தருகின்றன. அவற்றில் சில....**

* தியாக மனப்பான்மை, இறைநம்பிக்கை மேலோங்கல்.
* சமாதானம், சமத்துவம் (ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், நிறபேதம், குலபேதம் இன்மை) பேணப்படல்.
* இறைவனின் கட்டளைக்கு அடிபணிதல் இதனால், நமக்கு வாழ்வில் என்றுமே வெற்றி கிட்டும் என்பது உணர்த்தப்படல்.
* இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்கும் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குமான வாய்ப்பு.
* உழ்ஹிய்யா வழங்கப்படுவதன் மூலம் சமூகத்திலுள்ள அனைவரும் சந்தோஷமாக பெருநாளைக் கொண்டாடக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.
* பெருநாள் தொழுகையின்போதும் ஹஜ் கடமை நிறைவேற்றலின்போதும் ஒரே நேரத்தில் பலரைச் சந்தித்துக்கொள்வதற்கும் ஸலாத்தினைப் பரிமாறுவதற்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது. இது ஒற்றுமை, சமாதானம் போன்றவற்றிற்கு வழிவகுக்கின்றது.



## நபி வழியில் பெருநாள்

* பெருநாளன்று ஒவ்வொரு முஸ்லிமும் குளித்து, புத்தாடை அணிவது ஸுன்னத்தாகும். நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைக்குப் புறப்படுமுன் குளித்து, ஆடைகளில் மிக அழகான ஆடையை அணிவார்கள் என உமர்(ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.
* ஆண்கள் நறுமணம் பூசிக்கொள்வது நபி வழியாகும்.
* ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்குச் செல்லும்போது உண்ணாமல் செல்வது ஸுன்னத்தாகும். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஈதுல் அழ்ஹா பெருநாளில் தொழாமல் உணவருந்த மாட்டார்கள். (ஆதாரம்-திர்மிதி)
* ஆண்கள் சத்தமாகவும் பெண்கள் மெதுவாகவும் தக்பீர் சொல்வது நபி வழியாகும். நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் தமது வீட்டிலிருந்து புறப்பட்டு தொழும் இடம் வரும் வரை தக்பீர் சொல்பவர்களாக இருந்துள்ளார்கள். (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழி) அவர்கள்)
* பெருநாள் தொழுகைக்காக நடந்து செல்வது நபி வழியாகும். (ஆதாரம் : திர்மிதி)
* சூரியன் உதயமாகி தொழுகை தடுக்கப்பட்ட நேரம் முடிந்த பின்னர் பெருநாள் தொழுகை தொழுவதும், பெருநாள் தொழுகையை பள்ளியில் தொழுவதைவிட திடலில் தொழுவதும் சிறந்ததாகும். இவை நபி வழியும்கூட.
* பெருநாள் தொழுகைக்குச் செல்லும்போது ஒரு வழியாகச் சென்று மறுவழியாகத் திரும்புவது நபி வழியாகும்.

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ்
# பபிலோ

"மக்கள் எதிர்பார்ப்பு கலைக்கு முக்கியத்துவம் வழங்குவதல்ல. கலைஞரின் பொறுப்பை பின்பற்றுவதாகும். அவ்வாறான கலையின் வெளிப்பாடு ஆச்சரியத்தை ஏற்படத்தக்கூடியதாக இருக்கும். அதனால், கலைஞன் பற்றிப் பேசாது ரசிகர்கள் பற்றிக் கவனிக்க வேண்டும். காரணம் கலையை மதிப்பது ரசிகர்களாவர். அதனால், மதிப்பவரது தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும்"

இது உலகப் புகழ் பெற்ற ஓவியரான பபிலோ பிகாசோவின் கூற்றாகும். ஒரு கலைஞனின் கைகளால் நிறைவேற வேண்டிய பொறுப்புக்களை இக்கூற்று வெளிப்படுத்துகின்றது.

## பிகாசோ என்ற ஓவியர்

பிகாசோ ஓவியராக புகழ் பெற்ற ஒருவராவார். அத்துடன், அவர் ஒரு கட்டட நிர்மாணத்துறைக் கான பட வரைஞரும்கூட. அதேபோன்று, செதுக்கல், ஓவிய வேலைப்பாடுகளி லும் நல்ல பிரபல்யம் பெற்ற ஒருவராவார். அந்தவகை யில், 20 ஆம் நூற்றாண்டில் உருவான பல் திறமைசார் முதல்தர ஓவியர் இவராவார்.

## பிறப்பு

இவர் 1881 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ஸ்பெய்னின் அந்தலூஸ் பிரதேசத்தில் மலகா எனும் பகுதியில் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் டொன் ஜோசே ருய்ஸ்மய் பிளஸ்கோ என்பதாகும். தாயின் பெயர் மாரியோ பிகாசோ என்பதா கும். பிகாசோ என்பது முழு மையான கலைஞனைக் குறிக்கும் சொல்லாகும். பபிலோ பிகாசோ குடும்பத் தில் இளையவராவார். அவருக்கு இன்னொரு மூத்த சகோதரியும் இருந்தார்.

## நீண்ட பெயரை உடையவர்

உலகில் மிக நீண்ட பெயரை யுடைய ஓவியர் இவராவார். இவரின் தந்தையின் பெயரு டன் சேர்த்து இவரது பெயரை எழுதினால் பபிலோ பிகாசோ ஜோசே பிரான்சிஸ்கோ டி பவுலா ஜுவான் நொபோ முசெனோ மரியா டி லொஸ் ரொமெடியோஸ் ஸ்பிரியாகோ டிலா சன்டிசிமா ட்ரனிமட் ருய்ஸ் என்பதாகும். அவரது குடும்பப் பெயர்களே, இந்தளவுக்கு நீளமாக இருப்ப தற்குக் காரணமாகும். அவரது பெயர் பிகாசோ என்பதாகும். ஸ்பெய்ன் மரபின்படி, தாய் வழியில் பிகாசோ என்ற பெய ரும் தந்தை வழியில் ருய்ஸ் என்ற பெயரும் சேர்ந்து வாசிக்கப்படுகின்றது.

## தந்தையின் சொத்து

இவர் சிறு வயதில் இருந்தே, ஓவியம் வரையும் ஆற்றலை தந்தை வழித் திறமையாகப் பெற்றிருந்தார். இவரது தந்தை பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியரா வார். அவர் வாழ்ந்த பிரதேசத்தின் நூதனசாலையின் பொறுப்பாளராகவும் இருந்தார். இவர் இயற்கைக் காட்சி களையும் பறவைகளையும் பார்த்து வரையும் ஆற்றல் பெற்றிருந்தார். சிறு வயதில் இருந்தே வர்ணச் சாயம், எண்ணெய்ச் சாயம்கொண்டு சித்திரங் களை வரையும் பரிச்சயத்தை இவரது தந்தை படிப்படியாகப் புகட்டி வந்தார். அவரது தாய் பிகாசோவின் பெயரை சிறு வயதில் 'பிஸ்' என்று அழைத்தார். பிஸ் என்பது ஸ்பானிய மொழியில் பென்சில் என்பதாகும்.

## உயர்கல்வி வரம்

இவர் ஓர் ஓவியராக வர வேண்டுமா யின், நல்ல பயிற்சியுடன், சிறந்த ஒழுக்கமுள்ளவரென்னும் புகழையும் பெற்றிருக்க வேண்டும் என்று பிகாசோ வின் தந்தை கருதினார். அதனால், அவர் பிகாசோவிற்கு மனித உருவங் களையும் பொருட்களையும் பார்த்து வரையக் கற்றுக்கொடுத்தார். இக்காலப் பகுதியில் பிகாசோவின் சகோதரி அகால மரணம் அடைந்தார். அதனால், மனக்குழப்பம் அடைந்த பிகாசோ பாசிலோனாவுக்கு புறப்பட்டார். தந்தையும் பாசிலோனா பல்கலைக்கழ கம் ஒன்றுக்கு மாற்றம் பெற்றுச் சொன் றார். தனது மகனிடம் அபரிமிதமான திறமைகள் இருப்பதைக் கண்ட தந்தை ,பிகாசோவையும் அப்பல்கலைக்கழகத் தில் சேர்த்துவிட்டார். அப்போது, 13 வயதுடையவராக இருந்த பிகாசோ அப்பல்கலைக்கழகத்தில் எதிர்பாராத திறமைகளை வெளிப்படுத்தியதோடு, பரீட்சைகளிலும் நல்ல முறையில் சித்தியடைந்தார்.

## வெளிநாட்டுப் பிரயாணம்


இவரது திறமைகளை வளர்க்க உயர்கல்வி கற்பதற்காக சென்பிரான்சிஸ்கோவில் ரோயல் கல்விநிறுவனத்தில் பிகாசோ சேர்க்கப் பட்டார். அங்கு கல்வி கற்கும் காலப் பகுதியில் வெளிநாட்டுச் சுற்றுலாக்களி லும் கலந்து கொண்டார். இதன்மூலம் பாரிஸ் நகரத்திற்குச் சென்ற பிகாசோ வுக்கு கவிஞரும் பத்திரிகையாளருமா கிய மக்ஸ் ஜா கொப்பை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் பிகாசோ வுக்கு பிரான்ஸ் மொழியைக் கற்பித் தார். அங்கு மிகவும் கஷ்டமான நிலை மைகளை பிகாசோ சந்தித்தார். மக்ஸ் இரவில் உறங்கும்போது பிகாசோ சித்தி ரங்களை வரைந்தார். பகலில் உறங்கி னார். அத்துடன், கடும் குளிர் காரண மாக, அறைக்கு உஷ்ணம் ஊட்ட வரைந்த ஓவியங்களை எரித்து தீ மூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், அப்போது அவர் 'யங் ஆர்ட்டிஸ்ட்' சஞ்சிகைக்கு கேலிச்சித்திரம் ஒன்றை வரைந்தார். அத்துடன், வறுமையை வெளிப்படுத்தும் அதிகமான சித்திரங் களையும் அந்த சஞ்சிகைக்கு அவர் வரைந்தார்.

## பிகாசோ என்னும் எழுத்தாளர்

சித்திரம், ஓவியம், எழுத்துத்துறை யில் அவரிடம் மிகுந்த ஆர்வம் காணப் பட்டது. 1901 ஆம் ஆண்டில் அவர் 'ஆர்ட் ஜுவான்' என்ற சஞ்சிகையை ஆரம்பித்தார். அவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் அந்த சஞ்சிகையில் பிரசு ரிக்கப்பட்டன. 1912 இல் Papers Colls என்ற சஞ்சிகையை வெளியிட் டார். 1913 இல் 'Lespalres Cubistes' என்ற சஞ்சிகையை வெளியிட்டார். 1930 ஆம் ஆண்டு சிற்பக் கலையிலும் பிரவேசித்தார். 'பென்டன் சோ ஒஃப் ஸ்கிரிச் அவுலஸ்' 'சலமோயா ஒஃப் ஸ்வோட்ஸ்' ஆகிய சஞ்சிகைகளை அவர் வெளியிட்டார்.

## பிகாசோவின் படைப்புக்கள்

அவரின் வாழ்நாள் முழுவதிலும் பல்வேறு விதமான





வாத்தியக் கலைஞர் ஓவியம் 1921



பபுன் சிற்பம்



சிகாகோவிலுள்ள பிகாசோ சிற்பம்



குவர்னிகா ஓவியம் 1937

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற ஓவியர் பிகாசோ



கலைப்படைப்புக்கள் வெளியாகின. அவை சஞ்சிகைகளாகவும் ஆக்கங்களாகவும் ஓவியங்களாகவும் சுமார் 50,000 இற்கும் மேற்பட்ட படைப்புக்கள் ஆகும். இவற்றில் 1,885 சிற்பங்கள், 1,228 ஓவியங்கள், 2,880 பீங்கான் மட்பாண்ட சிற்பங்கள், சாதாரண சிற்பங்கள் 12,000, திரைச்சீலை சித்திர வேலைப்பாடுகள் 12,000 அளவில் என்பன இவரது படைப்புக்களாகும். இவை பிரான்சின் பாரிஸ் அரும்பொருட்காட்சிசாலையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் அவிக்நோக் பெண், பர்டாட்ஸ்டென் சித்திரம், சாய் நாற்காலியில் பெண் அமர்ந்திருக்கும் சித்திரம், குட்டையான நடனக்காரர், நோயாளிக் குழந்தை, குடும்பம், இத்தாலியப் பெண்கள், அழும் பெண், மனிதனின் மூன்று யுகங்கள், பெண்ணின் உடல், கிட்டார், இரண்டு குழந்தைகள், மரத்தின்கீழ் நாய், குவர்னிகா உட்பட பல்வகையான ஓவியங்கள் உள்ளன.

## குவர்னிகா

குவர்னிகா என்பது பிகாசோவால் வடிவமைக்கப்பட்ட சிற்பமாகும். முதலாம் உலக மகாயுத்தத்தில் குவர்னிகா நகருக்கு குண்டு பொழியப்பட்டதை மையமாக வைத்து இந்த சிற்பம் செதுக்கப்பட்டது. 'கொலாஜ்' சித்திர வேலைப்பாட்டை முதன்முறையாகப் பயன்படுத்தி இதனை அலங்காரம் செய்துள்ளார். யுத்தத்தின் கொடூரத்தன்மை, தனிமை, புலம்பல், நீதி கேட்டுப் புலம்புதல் ஆகிய வெளிப்பாடுகள் இந்த சித்திரத்தின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டன. ஓவியத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வர்ணக் காகிதமும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த சித்திர சிற்ப வேலைப்பாடுகள் நியூயோர்க்கில் உள்ள அரும்பொருட் காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ளன.



பாரிசில் உள்ள பிகாசோ நூதனசாலை

## அவிக்னோ பெண்கள்

அஸ்பீரிய சித்திர மரபுகளுக்கு ஏற்ப வரையப்பட்ட இந்த சித்திரங்கள் சித்திர வேலைப்பாட்டில் புதிய வரலாற்றை உதயமாக்குவதாக அமைந்தன. ஸ்பெய்னில் பார்சிலோனா நகரின் அவிக்னோன் வீதியில் வாழ்ந்த சில பெண்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் இந்த சித்திரங்கள் ஆபிரிக்காவின் நீக்ரோக் கறுப்பினப் பெண்களின் வாழ்க்கையையும் சித்தரிப்பதாக அமைந்தன. இதில் கொழுப்பு வர்ணம் கலந்த சித்திர வேலைப்பாடுகள், எல்லையற்ற வர்ண வேறுபாடுகளையும் காணமுடிகின்றது.

## ஓவியரின் கருத்துக்கள்

இவரின் முக்கியமான கருத்துக்கள், வார்த்தைகள் ஏராளம் உள்ளன. அவை எதிர்காலத்திற்கு முன்மாதிரியானவையாகும். அவை வருமாறு:

- "கலைக்கு நிகழ்காலத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியாவிட்டால் எதிர்காலம் என்ற ஒன்று இருக்காது. அவை எகிப்திய கலை மரபிற்குட்பட்டவையல்ல. அவை இன்றும் உயிரோட்டமுடையனவாகும்"
- மாற்றம் பரிணாமம் அல்ல.
- பௌதீகவாதம் வேறு குருகுல வாதங்களில் இருந்து வேறுபடவில்லை. அடிப்படைகளும் மரபுகளும் அனைத்துக் குருகுலங்களுக்கும் பொதுவானவையாகும். இயற்கையும் கலையாகும். ஒன்றுக்கொன்று முழுமையாக, வேறுபட்ட விடயம் இருப்பது இயற்கையிலாகும்.
- 'தென்படுவனவற்றை வரைய வேண்டும். வேலை செய்வது நோய்க்குப் பரிகாரம் ஆகும்'
- 'குறியீடு பற்றி விளக்குவது ஓவியரின் பொறுப்பல்ல. அது அவருக்கு சித்திரம் வரைவதை விட்டுவிட்டு சொல்ல விரும்புபவைகளை காட்சிப்படுத்துவதாகும்'
- 'ஓவியங்களைப் பார்க்கும் பார்வையாளர்கள் குறியீடுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அதன் ஊடாக ஓவியர் சொல்ல விரும்புவதைப் புரிந்துகொள்ள வேண்டும்'

## பிகாசோ என்ற சிற்ப வேலைக்காரர்

பிகாசோ ஓர் ஓவியர் மட்டுமல்லாது; சிற்பக்கலைஞரும் ஆவார். 1949 ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் நடைபெற்ற சிற்ப வேலைப்பாட்டுக் கண்காட்சியிலும் அவர் பங்குபற்றினார். அங்கு அவர் செதுக்கிய சிற்பம் 50 அடி உயரமானதாகும். அதனை 'சிகாகோ பிகாசோ' என்று பெயரிட்டனர். அந்தப் படைப்புக்கு 1 லட்சம் டொலர் அன்று பரிசாகக் கிடைத்தது. அந்தப் பரிசுப் பணத்தை சிகாகோவில் வாழ்ந்த ஏழை மக்களுக்கு அவர் பகிர்ந்தளித்தார்.

## ஓவியங்கள்

இவரால் வரையப்பட்ட ஓவியங்களை மூன்று காலப்பகுதிகளுக்கும் உரியதாக வேறுபடுத்தி நோக்கலாம். அவை நீலவர்ணக் காலம், ரோஜா நிறக் காலம், ஆபிரிக்க காலம் என்பனவாகும். அத்துடன், கனிஷ்கவாத காலம் என்பதும் அதிக முக்கியமான காலப்பிரிவாகும்.

**நில நிறக்காலம்:**

1901-1902 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நில நிறக் காலச் சித்திரங்கள் என்றழைக்கப்படும். அக்காலப்பகுதியில் வரைந்த சித்திரங்களில் அதிகமாக நீல வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆங்காங்கே பிச்சை எடுப்பவர்கள், நடனக்காரர்கள், வறுமையால் வாடும் பெண்கள் ஆகியோர் அத்தகைய சித்திரங்களில் பிரதான இடம் பிடித்திருந்தனர்.

**ரோஜா நிறக்காலம்:**

1904-1906 வரையான காலப்பகுதிக்குரிய சித்திரங்கள் ரோஜா (Pink) நிறச் சித்திரங்கள் ஆகும். இளைஞர்கள், தலைமுடி வாறும், பெண்கள், நீச்சல் வீரர்கள், குடும்பம், வானர மனிதர்கள் என்பன அந்த வகைச் சித்திரங்களில் இடம் பிடித்திருந்தன.

**ஆபிரிக்க காலம்:**

1907-1909 இடைப்பட்ட காலம் ஆபிரிக்க காலம் ஆகும். இக்காலச் சித்திரங்களில் ஆபிரிக்க சித்திர மரபுகள் இணைந்திருந்தன.

**கனிஷ்க சித்திரம்:**

இக்காலப் பகுதி சித்திரங்களில் சதுர மற்றும் கூம்பு வடிவங்கள் காணப்பட்டன. அத்துடன், பிரத்தியேகமான ரேகைகளும் இணைந்திருந்தன. அவிக்னோன் பெண்கள், வயலின் கலைஞர்கள், புலம்பி அழும் பெண்கள் ஆகியோர் இவ்வகைச் சித்திரங்களில் காணப்பட்டனர். முதலாம் உலகப் போரின் பின்னர் வரையப்பட்ட இவ்வகை சித்திரங்களில் புது நவீன மரபுகள் பின்பற்றப்பட்டிருந்தன.


## ஓவியர் பிகாசோவின் மறைவு

இவர் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி பிகாசோ இவ்உலகை விட்டு மறைந்தார். அவர் மரணமடையும்வரை இவ்வுலகிற்கு அரிய பல ஓவியங்களையும் சிற்பங்களையும் பொக்கிஷங்களாக வழங்கியுள்ளார். 'ஓயாது உழைப்பது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கிறது' என்பதற்கு முன்மாதிரியாக அவரின் இறுதி மூச்சு வரை ஓவிய உலகிற்கு அவர் அரும் பணியாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமே.

**அமீர் ஹூசைன்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மொரோக்கோ


ரபாத் நகரின் ஒருபக்கத் தோற்றம்


**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சி வரம்புடைய முடியாட்சி.
**தேசிய பெயர்:** அல்-மம்லகா அல்-மஃரிபியா (Kingdom of Morocco).
**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து 1956, மார்ச்2; ஸ்பெய்னிடமிருந்து 1956, ஏப்ரல் 7.
**தேசிய விடுமுறை தினம்:** சிம்மாசனம் ஏறிய தினம் ஜூலை 30.
**ஆட்சியாளர்** (1999): மன்னர் VI ஆம் முஹம்மத்.
**பிரதமர்** (2007): அப்பாஸ் அல் ஃபாஸி.


மன்னர்

## புவியியல்

ஜிப்ரோல்டர் ஜலசந்திக்கு அருகே ஆபிரிக்காவின் வடமேற்கு மூலையில் இந்நாடு அமைந்துள்ளது. அட்லாண்டிக் சமுத்திரத்திலும் மத்தியதரைக் கடலிலும் கடற்கரையைக் கொண்டுள்ளது. **கிழக்கு:** அல்ஜீரியா; **தெற்கு:** மேற்கு சஹாரா, மொரிடானியா மாநிலம் ஆகியன எல்லைகளாகக் காணப்படுகின்றன. வடக்கேயான மத்தியதரைக் கடற்கரைப் பகுதி மலைகள் நிறைந்த பிரதேசமாகும். அற்லஸ் மலைத்தொடர் நாட்டின் வடகிழக்கே காணப்படுகின்றது. அதன் சராசரி உயரம் 11,000 அடி (3,353 மீற்றர்) ஆகும்.

**மொத்தப் பரப்பு:** 172,413 ச.மைல் (446,550 ச.கி.மீற்றர்); **நிலப்பரப்பு:** 172,317 ச.மைல் (446,301 ச.கி.மீற்றர்).





**தலைநகரம்** (2003):ரபாத்.
**பெரிய நகரங்கள்:** கஸாப்லான்கா, மராகெச், பெஸ்.
**உயர் சிகரம்:** ஜபள் துப்கல் (4165 மீற்றர்):


தேசிய இலச்சினை







**தாழ் மையம்:** செப்கா டாஹ் (55 மீற்றர்).
**மக்கள் தொகை:**1,627,428.
**நாணயம்:** திர்ஹம்.
**மொழிகள்:** அரபு (உத்தியோகபூர்வ மொழி), பெர்பர், வர்த்தக மொழியாக பிரெஞ்ச் (அரச மற்றும் ராஜதந்திர மொழியாகவும் பிரெஞ்ச் பயன்படுத்தப்படுகின்றது).
**இனக்குழுக்கள்:** அரேபிய-பெர்பர் 99.1%, யூதர் 0.2%, ஏனையோர் 0.7%.
**சமயங்கள்:** இஸ்லாம் 99%, கிறிஸ்தவம் 1%.
**எழுத்தறிவு** (2004): 52.3%. **இணையத்தளக் குறியீடு:** .ma
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +212.
**தேசிய கீதம்**
manbita al ahrar
machriqa al anwar
mountada sou'dadi wa himah
doumta mountadah wa himah...என ஆரம்பமாகின்றது.


மொஹமட் V சர்வதேச விமானநிலையம்

## வரலாறு

கி.மு 2000 தொடக்கம் மொரோக்கோ பெர்பர்களின் குடியேற்ற பிரதேசமாக இருந்து வந்துள்ளது. கி.பி.685 இல் அரேபியர்கள் இப்பகுதியைக் கைப்பற்றிய பின்னர் இங்கு இஸ்லாம் அறிமுகமானது. பெர்பர்கள் அரேபியருடன் இணைந்து கி.பி.711 இல் ஸ்பெய்னின் பாரிய பகுதிகளை தம்வசப்படுத்தியது. காலப்போக்கில் ஸ்பெய்ன் போர்த்துக்கல்லுடன் இணைந்து மொரோக்கோவைக் கைப்பற்றியது. 1660 இல் மொரோக்கோ அலவைட் ராஜவம்சத்தினரின் ஆட்சியின்கீழ் வந்தது. இடையில் 1956 வரை பிரான்ஸ் மற்றும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகளின் பாதுகாப்புப் பகுதியாக இருந்தது. 1956 இல் மன்னராட்சி மீண்டும் உருவாகியது. பின்னர் 1977 முதல் நடைபெற்று வருகின்ற அனைத்துப் பொதுத் தேர்தல்களிலும் அரச வம்ச ஆதரவாளர்களே வெற்றி பெற்று வருகின்றனர்.


ராஜமாளிகை


பிரதமர்

## கலாசாரம்

பல்வேறு கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் நாடுதான் மொரோக்கோ. ஒவ்வொரு மதத்தின் சாயலும் கலாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தன் கலாசாரத்தையும் அதன் தொன்மையையும் பேணிவரும் ஒரு நாடாகவே மொரோக்கோ திகழ்கின்றது.

## காலநிலை

பொதுவாக உலர் காலநிலையைக்கொண்ட மொரோக்கோவில் நொவெம்பர் முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் சிறிதளவு மழைவீழ்ச்சி கிடைக்கும். தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகள் பாலைவனப் பிரதேசமாக இருப்பதால், கோடைகாலங்களில் இங்கு அதி உயர் வெப்பநிலை நிலவும். மிக உயர்ந்த மலைப்பிரதேசங்களில் கோடைகால மாலை வேளையில் அதிக குளிர் நிலவுவதோடு, மாரிகாலத்தில் உறைபனியும் காணப்படும்.


கஸாப்லான்கா நகரின் முக்கிய ஸ்தளங்கள்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1.266 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 16,005 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 27, FM 25, SW 6. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1995): 35. **இணையத்தள வழங்குனர்கள்:** 137,187; இணையத்தளப் பாவனையாளர்கள்: 6.1 மில்லியன்.

## போக்குவரத்து


மொரோக்கோ நாடாளுமன்றம்

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 1,907 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 57,493 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 32,716 கி.மீ; செப்பனிடப்படாதவை 24,777 கி.மீற்றர்). **துறையும் துறைமுகமும்:** அகாதிர், அல் ஜடிடா, கஸாப்லான்கா, அல் ஜோர்ப் லஸ்பார், கெனிட்ரா, மொஹமதியா, நாடோர், ரபாத், சாபி, டென்ஜியர் மற்றும் ஸ்பானிய கட்டுப்பாட்டில் உள்ள சியூட்டா, மெலிலா. **விமான நிலையங்கள்** (2007): 60.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 19%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பார்லி, கோதுமை, திராட்சை ரசம், மரக்கறி வகைகள், ஒலிவ், கால்நடைகள். **தொழிலாளர் தொகை:** 11.35 மில்லியன். **கைத்தொழில்கள்:** பொஸ்பேற் சுரங்கத் தொழில், உணவுப் பொருட்கள், தோற் பொருட்கள், புடவை வகைகள், உல்லாசப் பயணத்துறை. **இயற்கை வளங்கள்:** பொஸ்பேற், இரும்புருக்கு, ஈயம், நாகம், மீன், உப்பு. **ஏற்றுமதிகள்** (2009): ஆடைகள், மீன், கனியங்கள், பழ வகைகள், மரக்கறி வகைகள். **இறக்குமதிகள்** (2009): சுத்திகரிக்கப்படாத பெற்றோலியம், நூல் வகைகள், தொடர்பாடல் உபகரணங்கள், பிளாஸ்டிக் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): பிரான்ஸ், ஸ்பெய்ன், ஐக்கிய ராச்சியம், இத்தாலி, இந்தியா, ஜேர்மனி, ரஷ்யா, சவுதி அரேபியா, சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ அல் பாஹியா மாளிகை ✱ மன்னர் மொஹமட் V கல்லறைக் கட்டடம் ✱ சாடியன் கல்லறை ✱ மாமொரா வனம் ✱ ஃப்ரியோடோ குகைகள் ✱ மெனாரா பூங்கா ✱ ச்செல்லா பூங்கா இடிபாடுகள் ✱ ஹசன் கோபுரம் ✱ அக்டால் பூங்கா.


ஜபள் துப்கல் மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை ஒத்துள்ள விலங்கு



உயிரினங்களில் கெரில்லா மற்றும் சிம்பன்சிகளை மனிதனை ஒத்த விலங்குகள் என பொதுவாகக் கருதுவர். கெரில்லாவை விடமும் சிம்பன்சிகளிடமும் காணப்படும் அநேக குணாதிசயங்கள் மனிதனின் குணாதிசயங்களுடன் ஒத்துப் போவதே இதற்குரிய காரணமாகும். இவை ஆன்த்ரோபொய்ட் (Anthropoid) வகையைச் சார்ந்த ஒருவகை வாலில்லாக் குரங்குகளாகும். இவை ஆபிரிக்கா மற்றும் ஆசியாவிலுள்ள அடர்ந்த காடுகளில் காணப்படுகின்றன.

கெரில்லாக்கள் ஏறக்குறைய மனிதனின் உயரத்திற்கு இணையாகவுள்ளன. இருப்பினும், இவற்றின் உடல் வலிமையாகவும் பெரியதாகவும் கறுப்பு நிறமாகவும் உள்ளன. இவை 20 முதல் 30 வரையிலான தமது இனங்களுடன் சேர்ந்து கூட்டமாக வாழ்கின்றன. தற்பொழுது உலகில் வாழும் மந்தி வகைகளில் இதுதான் மிகப்பெரியது. ஆண் விலங்கானது பெண் விலங்கைவிடப் பெரியது. இவை கைகள், கால்களின் உதவியின்றி நிமிர்ந்து நடக்கக்கூடியவை. இளம் கெரில்லாக்கள் முதிர்ச்சியடையும்வரை பெற்றோருடன் சேர்ந்தே வாழ்கின்றன. இளம் கெரில்லாக்கள் மரக்கிளைகளிலேயே படுத்துறங்குகின்றன. ஆனால், முதிர்ந்த கெரில்லாக்கள் நிலத்தில் தூங்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளன.



பொதுவாக, கெரில்லாக்கள் அமைதியாக வாழும் தன்மையுடையனவாக இருந்தபோதிலும் தொல்லை கொடுத்தால், எதிர்த்துத் தாக்கும் குணமுடையவை. இவை வாயிலிருந்து ஒருவித இடி முழக்கம் போன்ற பயங்கர சப்தத்தை எழுப்பக் கூடியவை. இதனால், சில விலங்குகள் இதனைக்கண்டு அஞ்சுவதுமுண்டு. இளம் கெரில்லாக்கள் புழு, பூச்சி, பறவைகளின் முட்டை, இலையின் மொட்டு ஆகியவற்றை உண்ணுகின்றன. ஆனால், முதிர்ந்த பிராணிகளோ, தாவரங்களை உண்ணுகின்றன. உலகில் இவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து அழியும் நிலையிலுள்ளதால் அழிவடையும் உயிரினங்களின் பட்டியலில் இவ்வகை கெரில்லாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.



பரிணாம நிலையில் சிம்பன்சிகள் மனிதனுக்கு மிக அருகில் உள்ளன. இவற்றை மனிதனைப் போன்றுள்ள மந்திகள் என்றும் அழைப்பர். எலும்பு, பல்லின் எண்ணிக்கை அவற்றின் உள்ளமைப்பு என்பன மனிதனிலும் சிம்பன்சியிலும் ஒரேவிதமாக அமைந்துள்ளன. மனிதனின் நெற்றியில் உள்ளது போல் இவற்றின் நெற்றியிலும் சுருக்கங்கள் உள்ளன. இவற்றின் மண்டையோட்டு எலும்பின் அமைப்பும் இரத்தத்தின் தன்மையும் மனிதனுக்கு உள்ளது போலுள்ளன. இவை புத்திக்கூர்மையுள்ள விலங்குகள். இதன் உடல் எங்கும் உரோமங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அத்தோடு, அனைத்துண்ணிகளாகவும் இருக்கின்றன. உலகில் மேற்கு ஆபிரிக்காவிலும் மத்திய ஆபிரிக்காவிலுமே இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

# 'லாமா' பற்றி அறியாத விடயங்கள்



லாமா என்பது தென் அமெரிக்காவில் இன்கா மக்களினதும் 'அந்தீஸ்' மலைப்பிரதேசங்களில் வாழும் மக்களினதும் அன்றாட வாழ்வை நடத்த மிகவும் உதவியாக உள்ள ஒரு மிருக இனமாகும். அங்கு வாழும் மக்களின் பொருட்களை அன்றாடம் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குக்கொண்டு செல்லும் போக்குவரத்துச் சாதனமாகவும் 'லாமா'திகழ்கின்றது. அத்துடன், பல்வேறு தேவைகளுக்காக இதன் மயிர் பயன்படுத்தப்படுவதுடன் இறைச்சிக்காகவும் இந்த 'லாமா' மிருகம் வளர்க்கப்படுகின்றது.

இதிலிருந்து பெறப்படும் மயிரானது பல்வேறு நிறங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. வெள்ளை, கறுப்பு, கபில நிறம், சாம்பல், கடும் மண் நிறம் உள்ளிட்ட பல நிறங்கள் இதில் அடங்கும். கடந்தகாலத்தில் இந்த லாமா செம்மறி ஆடுகளோடு தொடர்புபட்ட இனமாகக் கருதப்பட்டாலும் பின்னர் இது ஒட்டகத்தின் உறவு இன மிருகமென இனங் காணப்பட்டுள்ளது.

நன்கு வளர்ச்சி அடைந்த லாமா ஒன்றின் உயரம் 5.5 அடிக்கும் 6 அடிக்கும் இடைப்பட்டதாகும். இம்மிருகமானது 127 கிலோகிராமுக்கும் 204 கிலோகிராமுக்கும் இடைப்பட்ட நிறையைக் கொண்டதாக இருக்கின்றது. பிறக்கும்பொழுது 'லாமா' 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட இறாத்தல் நிறையை மாத்திரம் கொண்டிருக்கும். இம்மிருகம் தமது இனத்துடன் சுமூகமாக வாழ விரும்புவதால் கூட்டம் கூட்டமாகவே காணப்படும். சிவப்பு, மண்நிறம், கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்களைக் கொண்டதாக காணப்படும் 'லாமா'வில் சில மேற்குறித்த அனைத்து நிறங்களும் கலந்த நிறமாகவும் காணப்படும்.

பெண் 'லாமா' ஒன்று வளர்ச்சியடைய 2 வருடங்களும் ஆண் 'லாமா' வளர்ச்சியடைய, 3 வருடங்களும் ஆகும். இவற்றின் ஆயுட்காலம் 20 முதல் 25 வருடங்களுக்கு இடைப்பட்டதாகும். நீண்ட உடலமைப்பையும் சிறிய தலையையும் பெரிய கண்கள் மற்றும் பெரிய காதுகளையும் கொண்டுள்ளது.

இவற்றின் மயிரின் தன்மை காரணமாக, அதிக குளிர்காற்று, அதிக பனி மற்றும் அதிக மழையிலும் நன்கு பாதுகாப்பாக வாழக்கூடியதாகவுள்ளது. 3 அங்குலம் முதல் 8 அங்குலம் வரையிலான நீளத்தைக்கொண்ட மயிர்களை இதன் உடலில் காணலாம்.

தனது நிறையைவிட, 25% முதல் 30% அளவு நிறைகொண்ட பொருட்களை எடுத்துச்செல்லும் ஆற்றல் கொண்டது. இற்றைக்கு 40 மில்லியன் வருடங்களுக்கு முன் லாமாவின் தாயகமாக, வட அமெரிக்காவே விளங்கியது. ஆனால், 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தென் அமெரிக்கா மற்றும் ஆசியாவிற்கும் அதன் பரம்பல் ஏற்பட்டது. மக்கள் குடிபெயர்ந்து வாழத் தலைப்பட்டதும் 'லாமா'வின் பரம்பலும் கூடவே இடம்பெற்றதாக கருதப்படுகின்றது.

'லாமா' ஓர்ஆரோக்கியம் நிறைந்த மிருகமாகும். அத்தோடு, புத்திசாலித்தனமான மிருகமாகவும் கருதப்படுகின்றது. குதிரையொன்று உட்கொள்ளும் உணவைவிட, 10% இற்கும் 20% இற்கும் இடைப்பட்ட அளவினைக்கொண்ட உணவையே இவை உட்கொள்கின்றன.

பெண் லாமா ஒன்றின் கர்ப்ப காலம் 350 நாட்களாகும். ஒவ்வொரு வருடமும் ஆண் லாமா தனது பெண் இணையை கைவிட்டுச் செல்லும் பழக்கத்தைக் கொண்டுள்ளது. (அ)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 1 (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ............................................... நேரம்: 45 நிமிடங்கள்

★ *21 ஆம், 22 ஆம் வினாக்களில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.*

21.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| பாடசாலை<br>ஆசிரியர்<br>மாணவர் | வைத்தியசாலை<br>வைத்தியர்<br>நோயாளி | வங்கி<br>முகாமையாளர்<br>பொருட்கள் |

22.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| அத்தாங்கு<br>குப்பைவாரி<br>கரைவலை | தூங்குக்குண்டு<br>மணியாசு<br>சாந்தகப்பை | சீவுளி<br>சுத்தியல்<br>கைவாள் |

23. பருமனின் ஒழுங்கு முறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?
    1. கிராமம், நாடு, மாவட்டம், மாகாணம், நகரம்
    2. கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம், நாடு
    3. நாடு, மாகாணம், நகரம், மாவட்டம், கிராமம்

24. பெறுமதி ஒழுங்கு முறைப்படி பொருட்களைக் காட்டும் விடை எது?
    1. வெள்ளி, தங்கம், இரும்பு, செம்பு
    2. இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம்
    3. இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு

25. குடும்ப உறுப்பினர்களைப் படிமுறையில் காட்டும் சரியான விடை யாது?
    1. நான், தம்பி, அம்மா, அண்ணா, அப்பா
    2. அப்பா, அம்மா, அக்கா, நான், தம்பி
    3. தம்பி, அக்கா, நான், அப்பா, அம்மா

26. பாடசாலைக் கடமைகளுக்குப் பொறுப்பானவர்களைப் படிமுறையில் காட்டும் சரியான விடை யாது?
    1. வகுப்பாசிரியர், அதிபர், பிரதி அதிபர், வகுப்புத் தலைவர்
    2. அதிபர், பிரதி அதிபர், வகுப்பாசிரியர், வகுப்புத் தலைவர்
    3. பிரதி அதிபர், வகுப்பாசிரியர், அதிபர், வகுப்புத் தலைவர்

★ *பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 27 ஆம், 28 ஆம் வினாக்களுக்குரிய சரியான சொல்லைத் தெரிவு செய்க.*

கல்லைச் ......▲ கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
◉ ......... மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்.

27. ▲ என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
(1) குயவன் (2) உழவன் (3) சிற்பி

28. ◉ என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
(1) மண்ணை (2) கல்லை (3) வயலை

29. இலங்கையில் உள்ள ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதற்குக் காரணம்;
(1) நீரை எவரும் தேவைகளுக்குப் பயன்படுத்தாமை
(2) நாடு முழுவதும் பெரும் மழை பெய்தமையால்
(3) பல கால்வாய்கள் வெட்டப்பட்டமையால்

30. ஒரு விளையாட்டுப் போட்டி ஒன்றில் மைதானத்தைச் சுற்றி சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என்னும் நிறக் கொடிகள் இதே ஒழுங்கு முறையில் நடப்பட்டுள்ளன. இதில் 45 ஆவது கொடியின் நிறம் என்ன?
(1) நீலம் (2) பச்சை (3) சிவப்பு

★ *31 தொடக்கம் 33 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புபட்டவை. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.*

நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே, பெற்றோர்கள் அவனை





அதற்காக (31) ................................. [(1) பயிற்சியளிப்பதற்கு (2) உற்சாகப்படுத்துவதற்கு (3) வழிப்படுத்துவதற்கு] இசை வகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்குத் தவறாமல் சென்று வயலின் (32) ...................... [(1) பாட (2) வாசிக்க (3) அடிக்க] நன்றாகக் கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் (33) ........................ [(1) மகிழ்ச்சி (2) கவலை (3) இரக்கம்)] அடைந்தனர்.

★ *தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.*

34. (1) அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது புறா பார்த்தது.
(2) ஒரு மரத்தின் கிளை மீது இருந்த புறா அங்குமிங்கும் பார்த்தது.
(3) அங்குமிங்கும் இருந்த புறா ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

35. (1) பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டும்.
(2) எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ள வேண்டும்.
(3) பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்.

★ *அருகே காணப்படும் உருவை அவதானித்து, 36 முதல் 38 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*




36. சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது? ..............................
37. வட்டத்திற்கும் முக்கோணத்திற்கும் மட்டுமே உரிய இலக்கம் எது?..............
38. வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றிற்கும் பொதுவான இலக்கம் எது?..............

★ *39 ஆம், 40 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எழுத்து நிரைகள் ஒவ்வொன்றிலும் ஒரு நல்ல இயல்பைக் காட்டும் ஒரு கூற்று மறைந்துள்ளது. இக்கூற்றின் எழுத்துக்களிடையே சேர்க்கப்பட்டுள்ள பொருத்தமற்ற எழுத்துக்களை நீக்கும்போது கிடைக்கும் கருத்துள்ள கூற்றைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

39. இ க ள வு மை கா யி வ ற் சி க மு ல் சு வி டு சி ல் லை யி ரி ல் கொ எ ண் மு டா த் டா து

..........................................................................

40. நோ ன் ய த ற் பி ற ம வா ழ் யி வே ம் கு பா றை வ நி ற் த ற உ செ சு ல் த வ டு ம்

..........................................................................

### வினாத்தாள் I இன் விடைகள்

*(நொவெம்பர் 10, 17 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 3 | (02) 2 | (03) 2 | (04) 3 | (05) 2 | (06) 3 |
| (07) 3 | (08) 2 | (09) 2 | (10) 3 | (11) 1 | (12) 1 |
| (13) 2 | (14) 2 | (15) 1 | (16) 2 | (17) 1 | (18) 3 |
| (19) 2 | (20) 2 | (21) 3 | (22) 1 | (23) 2 | (24) 2 |
| (25) 2 | (26) 2 | (27) 3 | (28) 2 | (29) 2 | (30) 3 |
| (31) 1 | (32) 2 | (33) 1 | (34) 2 | (35) 3 | (36) 2 |
| (37) 4 | (38) 3 | | | | |

(39) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து


(40) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்



## வண்ணத்துப்பூச்சியின் காதுகள்

வண்ணத்துப்பூச்சிகளுக்கு காதுகள் கிடையாது என்றும் அவற்றின் உறிஞ்சுகுழல் மூலமே அவை உணர்ந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றன என்றும் இதுவரை கூறப்பட்டது. ஆனால், அது தவறான கருத்து என தற்போது கூறப்படுகின்றது.

இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டோல் பல்கலைக்கழகக் குழு ஒன்று இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. அவர்கள் 'புளு மார்ஃபோ' இன வண்ணத்துப்பூச்சிகளில் காதுகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். அதன் வண்ணமயமான இறகுகள் உடலோடு இணையும் பகுதியில்தான் இதன் காதுகள் அமைந்துள்ளன. இது சிறிய புள்ளி போன்ற சற்று மேலெழும்பிய குமிழ் போன்று காணப்படும். சாயம்போன மஞ்சள் நிறத்தில் இது அமைந்திருக்கும். இந்தப் பகுதியே வண்ணத்துப்பூச்சிகள் ஒலியைக் கேட்கத் துணைபுரிகிறது. 1000 முதல் 5000 ஹேர்ட்ஸ் வரையிலான ஒலியை கேட்கும் தன்மையை இவை பெற்றிருக்கின்றன.


வண்ணத்துப்பூச்சியின் காதுப்பகுதி (zoom shot)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



களுதாவளை ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் த.சிந்துஜா,166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தவராசா-சரோசாதேவி தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.சபான், 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மிரிஹம்பிட்டிய மு.வித்தியாலய மாணவராவார்.



களுதாவளை ம.வித்தியாலய மாணவன் ச.சர்வஜன், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சண்முகநாதன்-சுந்தரேஸ்வரி தம்பதியரின் புதல்வராவார்.



கல்கமுவ முன்னோடி மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ரிப்கி மொஹமட், 183 புள்ளிகளைப் பெற்றுள்ளதோடு, குருநாகல் மாவட்டத்தில் தமிழ் மொழிமூலத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இவர், எம்.பரீட்-றிஸானா தம்பதியரின் புதல்வராவார்.



நி.ஹரிகிருஷ்ணா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். திருநாவுக்கரசு-சித்திரா தம்பதியரின் புதல்வரான இவர், களுதாவளை ம.வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றார்.



கமு/அல்-மனார் மத்.கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஸாமில் ஜம்ஸித், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யோ.கோகுலராஜ், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களுதாவளை ம.வித்தியாலய மாணவரான இவர், யோகநாதன்-காவேரி தம்பதியரின் புதல்வராவார்.



பாத்திமா சனா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/அல்-மனார் மத்.கல்லூரி மாணவியாவார்.



களுதாவளை ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கோ.சனுர்ச்சன், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கோபாலபிள்ளை-சந்திரவதனி தம்பதியரின் புதல்வராவார்.



ஏ.சும்லா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/அல்-மனார் மத்.கல்லூரியில் கல்வி பயில்கின்றார்.



கு/அத்தாரிக் மு.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த பாத்திமா அப்ரா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எஸ். அஹமட்-அஜ்மினா தம்பதியரின் புதல்வியாவார்.



கமு/அல்-மனார் மத்.கல்லூரியில் கல்வி பயிலும் இஸ்மத் பாத்திமா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தெல்தோட்டை, மலைமகள் இந்து மத்திய கல்லூரியிலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (முதலாம் வரிசை-இ.வ) வை.கோகுல், பீ.ரசிக்கா, எல்.நில்ஷானா, டீ.கிருஷாந்தினி, ஜே.சுதர்ஷியா, பி.சுதர்ஷினி, கே.கிருஷாந்த் ஆகியோரையும் (இரண்டாம் வரிசை-இ.வ) எம்.எஸ்.எலிசபெத் (ஆசிரியர்), பி.முத்தையா (அதிபர்), டி.சுபாஷினி (ஆசிரியர்)

# கல்வி

## முகாமைத்துவம் - 29

## கற்றலுக்கான ஆலோசனைகள்

# கல்வியில் போட்டி மனப்பாங்கு



**கல்வியில் மிகப் பிரதானமாக போட்டி அவசியம். போட்டி இருந்தால்தான் இலக்கு உறுதியடையும்; ஊக்கம் அதிகரிக்கும். இன்றைய நவீன யுகம் போட்டியை மையமாக வைத்தே சுழல்கின்றது. இந்த யுகத்தில் போட்டி இருந்தால் எதனையும் நாம் முன்னின்று பெற்றுக் கொள்ளும் நிலைமை ஊடுருவிக் காணப்படுகின்றது**

### கல்வியில் போட்டி

'படிப்பில் போட்டி இருக்க வேண்டும். ஆனால், பொறாமை கூடாது' என்பது நாமறிந்த வாசகமே. போட்டிக்கு யாராவது இருந்தால்தான் வேலையில் உற்சாகம் அதிகரிக்கும். ''நான் பரீட்சையில் சித்தியடைந்து விட்டேன்'' என்று சொல்வதைக் காட்டிலும், ''நான் பரீட்சையில் அவனைவிட அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து விட்டேன்'' எனக் கூறுவதையே ஒரு மாணவன் விரும்புவான்.

கல்வியைப் பொறுத்தவரையில், அதில் போட்டியை உருவாக்கிக்கொள்ளும் அளவுக்கு பலனும் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெற வேண்டுமானால், அந்த இலக்கை மனதில் உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் போட்டியில் தோல்வி ஏற்பட்டால் அதைச் சாபமாகக் கருதக்கூடாது. அதை வெற்றியின் முன் அறிவிப்பாகக் கருத வேண்டும். 'தோல்வியே வெற்றியின் அறிகுறி' என ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார். தோல்வி என்பது எமக்கு எந்நாளும்



உண்டாவதொன்றன்று; தோல்வி ஏற்பட்டால்தான் வெற்றியடைய வேண்டும் என்ற வெறி எமக்குள் உருவாகும். அந்த வெறியை எப்பொழுதும் குறைவடைய விடக்கூடாது.

''எக்கணத்திலும் என் மனம் தளர நான் அனுமதிப்பதில்லை. எச்செயலை சாதிப்பதற்கும் குன்றா முயற்சி, குறையா உழைப்பு, உரிய மனோசக்தி ஆகிய மூன்றும் மிகவும் வேண்டப்படுகின்றன''

- எடிசன்

### கல்வித் தகைமை

இன்றைய காலத்தில் கல்வியை சிறப்பாகக் கற்றோருக்குத்தான் அவர்களின் தகைமையின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இத்தகைமைகள் பாடசாலைக் கல்வி மூலமோ, பல்கலைக் கழகம் மூலமோ, தனியார் நிறுவனங்கள் மூலமோ உறுதிப்படுத்தப்படலாம். இன்றைய நிலையில் கல்வி கற்போர் வீதம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இவ்வாறான போட்டி நிறைந்த சமுதாயத்தில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் தங்களது முயற்சியை அதிகரிக்க வேண்டும். அதன் மூலமே சிறந்த விளைவுகளைப் பெறலாம்.



### நற்பண்பு தவறாத போட்டி



போட்டி மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டியது பரீட்சையில் சித்தியடையவும் கல்வியில் முன்னேறவும் மாத்திரம்தான். மாறாக, இவற்றினூடாக மாணவர்களிடையே உள்ள புரிந்துணர்வு மாறுபட்டு, குரோதம் ஏற்படக் கூடாது. சில மாணவர்கள் போட்டியினால் நற்பண்புகளைவிட்டு மனித நேயமில்லாத மாணவர்களாக மாற்றம் பெறுகிறார்கள். ஒரு மாணவனது மனதில் நற்பண்புகள் இல்லாவிடின், அவன் கல்வியில் எவ்வளவுதான் உயர் நிலைக்குச் சென்றாலும், எந்தப் பயனும் இல்லை.

அது மாத்திரமன்றி, படிக்கும்போது அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் சிலர் பின்வாங்குகின்றனர். அடுத்தவருக்கு உதவினால் அவன் பரீட்சையில் முதலிடம் பெற்றுவிடுவான் என்ற தப்பெண்ணம்தான் இதற்குக் காரணம். போட்டி மன்ப்பான்மை பொறாமையாக மாறும்போதே மாணவர்கள் இந்நிலைக்கு ஆளாகின்றனர். இது நிச்சயம் தவிர்க்கப்படல் வேண்டும். கல்வி தொடர்பில் ஏனையவர்களுக்கு உதவி செய்வதால் அறிவுத்திறன் பட்டை



தீட்டப்படுமே ஒழிய, குறையாது. எனவே, மாணவர்கள் சிறந்த போட்டி மனப்பாங்கை தங்களுக்குள் உட்புகுத்திக்கொண்டால் சிறந்த கல்வியைத் தொடரலாம் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப். சப்ரானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழங்களை உண்ணும் வௌவால்

# மிருகங்கள், பறவைக

**எம்மில் சிலர் பழ வகைகள், காய்கறிகளை உள்ளடக்கிய தாவர உணவுகளை விரும்புகின்றனர். மற்றும் சிலர் மீன், இறைச்சி வகைகளை உள்ளடக்கிய மாமிச உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டுவர். இந்த இரு வகை உணவு வகைகளை விரும்புவோரும் நம்மிடையே உள்ளனர். இதன்படி, பார்த்தால் எமது உணவு முறைகள் ஆளாளுக்கு வித்தியாசப்படுகின்றன. இதேபோன்றுதான், பறவைகள், மிருகங்கள் மற்றும் ஏனைய உயிரினங்கள் மத்தியிலும் பலதரப்பட்ட உணவுப் பழக்கவழக்கங்கள் உள்ளன. இந்த அடிப்படையில் மிருகங்கள், பறவைகளிடையிலான உணவு முறைகள் பற்றி நோக்குவோம்.**



## உணவுப் பழக்கவழக்கத்தின் அடிப்படையிலான வகைப்படுத்தல்

உணவு முறைகளின் அடிப் படையில் பறவைகள், விலங்குகளை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

- தாவர உண்ணிகள் (Herbivorous)
- மாமிச உண்ணிகள் (Carnivorous)
- அனைத்தும் உண்ணிகள் (Omnivorous)



அணில்

## தாவர உண்ணிகள்

தானிய வகைகள், பழங்கள், புல் வகைகள் மற்றும் வேறு தாவ ரப்பகுதிகளை உட்கொள்ளும் விலங்குகளை 'தாவர உண்ணிகள்' என்றழைப்பர். தாவர உண்ணிகளின் உணவு முறைகளின் அடிப்படையில் கீழ்வருமாறு அவற்றை வகைப்படுத்த முடியும்.

**இளந்தளிர்களை மேய்பவை: (Browser)**

இந்த வகைக் குரிய மிருகங் கள் பெரும் பாலும் தாவரத்தின் தளிர்ப் பகுதிகளையே உணவாகக் கொள்கின்றன. மான்கள், ஆடுகள் போன்ற பாலூட்டி விலங்கு களை இந்த வகைக்குள் அடக்கலாம். செடிகளின் தளிர்கள், பட்டைகள் என்பனவற்றை உணவாகக்கொள்வ தற்கு இவை அதிக ஆர்வம் காட்டுகின்றன.

**பழ உண்ணிகள்: (Frugivorous)**

பழங்களை உட்கொள்வதற்கு ஏற்ற தாக இயற்கையாகவே பல இயலுமை களைக் கொண்டுள்ள ஒரு பாலூட்டி உயிரினமாக வௌவால்கள் உள்ளன. பழங்களை நன்கு அரைத்து உண்ப தற்கு ஏற்றவகையில் அவற்றின் பற்கள் அமைந்துள்ளன. பழங்களின் சாறுகளை உறிஞ்சிக் குடிப்பதற்கு வசதியாக அவற்றின் வாய்ப்பகுதி அமைந்துள்ளமை விசேட அம்சமா கும். பழங்களை உட்கொள்ளும் நான்கு வகை வௌவால்கள் இலங்கையில் உள்ளன.

**புற்களை மேய்பவை: (Grazers)**

சிறிய செடிகள், புல் வகைகள் என்ப னவற்றை உட்கொள்ளும் மாடுகள், குதிரைகள் போன்ற பாலூட்டிகள் இந்தப் பிரிவில் அடங்கும். புற்கள், செடிகளை வளைத்துப் பிடித்து உட்கொள்வ தற்கு ஏதுவான வகை யில் இவற்றின் வாயின் கீழ்த்தாடை யின் முன்பகுதியில் அமையப்பெற்றுள்ள வெட்டுப்பற்கள் அமைந் துள்ளன. கடைவாய்ப்பற்கள் அவற்றை அரைத்து உண்ப தற்கு ஏற்றவாறு உள்ளன. கடைவாய்ப்பற்களால் அரைத்துக்கொள்ளும் உணவினை வாயின் ஓரம் சேமித்து வைத்து மீண்டும் மென்று உண்ணும். இம்முறையை அவை வழக்கமாகக் கொண்டுள்ளன.

## மாமிச உண்ணிகள்

மாமிச வகைகளை உண்ணும் மிருகங்களையே இவ்வாறு அழைப் பர். இவை விலங்குகளை வேட்டை யாடுவதில் அதீத ஆர்வம் காட்டுகின் றன. சிங்கம், புலி, ஓநாய் என்பன இந்தப் பிரிவில் அடங்கும். விலங்கு களை வேட்டையாடக்கூடிய வகை யில் இவற்றுக்குப் பலமான கால்கள் உள்ளன. அத்துடன், இலக்கு வைத்த இரையை பற்றிப் பிடித்துக் கொள்ளவும் காயப்படுத்தி பலமிழக் கச் செய்யவும் ஏற்றவாறு கூரான-வளைந்த-வலிமையான நகங்களும் இவற்றுக்கு உள்ளன. இவற்றின் கூர்மையான வேட்டைப்பற்கள் விலங்குகளின் உடல்களைத் துண்டு துண்டாகக் கிழித்து உட்கொள்ளக் கூடிய வகையிலும் கடைவாய்ப்



புலியின் வேட்டைப்பற்கள்

மான்

தவளை ஒன்று பூச்சியை இரையாகக்கொள்ளல்

### மிருகமொன்றின் பற்களின் அமைவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...களின் உணவு முறைகள்



பற்கள் அவற்றை மென்று உண்ண ஏதுவாகவும் அமைந்துள்ளன.

## அனைத்தும் உண்ணிகள்

மாமிச உணவுகளையும் தாவர உணவுகளையும் உண்ணுகின்றவற்றை இவ்வாறு அழைப்பர். கரடி, உடும்பு, நாய், பூனை, காகம் என்பனவற்றை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். இவை தாவரங்களையும் மாமிசங்களையும் உணவாகக் கொள்ளக்கூடிய இயல்பினைப் பெற்றுள்ளன.

## உணவு முறைகளின் அடிப்படையில் பறவைகளுக்கிடையிலான வேறுபாடுகள்

பறவைகளின் அலகுகள் (சொண்டுகள்) பல்வேறு அமைப்புகளில் உள்ளன. அவற்றின் இயல்புகளுக்கமைய, உணவினை உட்கொள்ள ஏற்ற வகையிலேயே அலகுகளின் அமைப்புக்கள் தகவமைக்கப்பட்டுள்ளன.

**✱ ஐந்துகளை இரையாகக் கொள்பவை: (Insect Catchers)**

இந்த வகைப் பறவைகளுக்கு பறக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்து சென்று அவற்றை இரையாக்கிக்கொள்ளும் திறன் உண்டு. இவற்றின் சொண்டின் அமைப்பு கூர்மையானது. பரந்த முக அமைப்பு உண்டு. உதாரணமாக; வெண்துணிக்கள்ளன், குண்டுகாலி, போன்ற பறவைகளைக் குறிப்பிடலாம். இவ்வகைக்குரிய மேலும் சில பறவைகள் மரக்கிளைகள், தண்டுப் பகுதிகளுக்குள் உள்ள புழு, பூச்சிகளை உட்கொள்வதனை வழமையாகக் கொண்டுள்ளன. மரப்பட்டைகள், தண்டுகளுக்குள் இருக்கும் புழு, பூச்சிகளை இனங்காணக்கூடிய ஆற்றலும் அவற்றை இரையாகக் கொள்வதற்காக, மரங்களைத் துளையிடக்கூடியவாறு வலிமையான சொண்டும் இவற்றுக்கு உள்ளன. இதற்கு உதாரணமாக கேரளா பறவையைக் குறிப்பிடலாம்.

**✱ தானியங்களை உட்கொள்பவை:**

இவற்றின் சொண்டுகள் சற்று பரந்தவாறு இருக்கும். தானியங்களைக் கொத்தி உண்ணக்கூடியவாறான அமைப்பில் அந்த அலகுகள் காணப்படும்.

உதாரணம்: நெற்குருவி, வீட்டுக்குருவி, கிளி.

**✱ மலர்களில் தேன் உறிஞ்சுபவை:**

சில பறவைகள் மலர்களில் உள்ள தேனை உறிஞ்சிக் குடிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. இதற்கென மிக நீண்ட-கூர்மையான-சற்று வளைந்த சொண்டு அமைப்பு இப்பறவைகளுக்கு உண்டு.

உதாரணம் : தேன்சிட்டு.

**✱ பை போன்ற அமைப்புள்ளவை:**

மீன்களை உணவாகக் கொள்ளும் ஒருசில பறவைகளின் கீழ்த்தாடைப் பகுதிகளில் பை போன்ற அமைப்பு இருக்கும். மீன்களை இரையாகக் கொள்வதற்கு வசதியாகவே இந்தப் பை போன்ற அமைப்பு உள்ளது. அப்பைக்குள் அகப்படும் மீன்களையே இப்பறவைகள் உணவாக உட்கொள்கின்றன.

**✱ மாமிச உண்ணிப் பறவைகள்:**

இரைகளைப் பிடிக்கவும் அவற்றை உட்கொள்ளவும் ஏற்ற வகையில் இவ்வகைப் பறவைகளின் சொண்டுகள் அமைந்துள்ளன. தவிர, இரையைப் பற்றிப் பிடிக்க ஏற்றவாறு கூரான நகங்களும் அவற்றுக்கு உள்ளன.

உதாரணம் : கழுகுகள், ஆந்தைகள்

**✱ வடிகட்டி உண்பவை: (Filter Feeders)**

நீரேந்துப் பகுதிகளில் வசிக்கும் ஒருசில பறவைகளின் சொண்டுகளில் வடிகட்டி போன்ற விசேட அமைப்பொன்று காணப்படும். இந்த அமைப்பு நீரில் வாழும் பூச்சியினங்களை உட்கொள்ளவும் நீர்த்தாவரங்களை உட்கொள்ளவும் அவற்றுக்கு உதவும்.

உதாரணம் : வாத்துகள், அன்னங்கள்.

**✱ மீன்களை இரையாக்குபவை: (Aerial Fishers)**

நீரேந்துப் பகுதிகளில் வசிக்கும் மீன்கொத்திகள், கொக்குகள் ஆகிய பறவைகளுக்கு மீன்களைப் பிடித்துக்கொள்ள வசதியாக, நீண்ட சொண்டுகள் உள்ளன. இந்த நீண்ட சொண்டினை நீரினுள் செலுத்தி, மீன்களை இரையாக்கிக்கொள்ள அவற்றால் முடியும்.

**✱ பழங்களை உட்கொள்பவை: (Fruit eaters)**

பழங்களை உணவாகக்கொள்ளும் பறவை இனங்களுக்கு விசேடமான முறையில் சொண்டுகள் அமைந்துள்ளன. இவை அவற்றின் அலகினால் சிறிய மற்றும் பெரிய பழவகைகளை துண்டு துண்டாக்கி உணவாகக்கொள்ளும்.

உதாரணம் : கிளி, மைனா, மரங்கொத்தி.

## உங்களுக்குத் தெரியுமா?

✱ கிளியின் நாக்கு மற்றைய பறவைகளைவிடத் தட்டையானது. அதனாலேயே அவை பேசும் ஆற்றலைப் பெற்றுள்ளன.

✱ தவளை, ஓணான் ஆகியனவற்றின் நாக்குகள் ஒட்டும் தன்மை கொண்டவை. பூச்சிகள் அவற்றின் பக்கமாகச் செல்லும்போது, நாக்கினை வெளியில் நீட்டும். அப்போது அந்தப் பூச்சிகள் ஒட்டும் நாக்கில் சிக்கிக்கொள்ளும். பின்னர் பூச்சிகளை உணவாகக்கொள்ளும்.

✱ யானையின் விசேடமான உறுப்பு அதன் தும்பிக்கை. இதனைப் பயன்படுத்திப் பெரிய மரங்களைச் சாய்த்து உணவாகக்கொள்ளும் ஆற்றலை அவை பெற்றுள்ளன.

✱ வண்ணத்துப் பூச்சிகளுக்குத் தேன் உறிஞ்சவென விசேட முக அமைப்பு உள்ளது. முகப்பகுதியில் அமைந்துள்ள குழாய் போன்ற அமைப்பு மலர்களில் உள்ள தேனை உறிஞ்சிக்குடிக்க உதவும்.

✱ நீலத் திமிங்கிலம் வாயை திறந்து கொண்டே நீந்தும். அப்பொழுது கடல்வாழ் சிறிய மீனினங்கள் அவற்றின் வாய்க்குள் சென்று விடும். பின் நீரை வெளியேற்றிவிட்டு மீன்களை உண்ணும்.

✱ நச்சுச்சிலந்தி விசேட முறையில் உணவினை உட்கொள்ளும். இது முதலில் இரையாக்கிக் கொள்ளவுள்ள உயிரினத்தினைத் தீண்டும். பின்னர் அதன் உடலினுள் நஞ்சினைச் செலுத்தும். இந்த நச்சுத் தன்மையினால் குறித்த உடற் தசைகள் கரைந்து விடும். அதன்பின்னர் அந்த உயிரினத்தை உணவாகக்கொள்ளும்.


✱ எலி, அணில்களின் பற்கள் வாழ்நாள் முழுவதும் வளரும் தன்மை கொண்டவை. அப்பற்களைக் கூர்மையாக்கிக்கொள்ள அவை மரக்குச்சிகளைக் கடித்துக் கொண்டே இருக்கும். (இ)



நச்சுச் சிலந்தி, பூச்சியொன்றை இரையாக்கிக் கொள்ளல்

### பறவைகளின் அலகுகளின் அமைப்புகள்



மாமிச உண்ணி வகைக்குரிய மிருகமொன்றின் பற்களின் அமைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் இயற்கை வளம்

ஒவ்வொரு நாட்டிலும் செயற்கை வளம், இயற்கை வளம் என பல்வேறுபட்ட வளங்கள் காணப்படும். நம் நாட்டிலும் பல்வேறு வளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பிரதானமானதுதான் இயற்கை வளம்.

இயற்கை வளங்களிலும் பிரதானமாக இலங்கையை சூழவுள்ள சமுத்திரங்கள், இலங்கையின் மலை நாடு, காடுகள் என்பன சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இவை பற்றி சற்று நோக்குவோம். இலங்கையில் அழகுமிக்க கடற்கரையோரங்களாக நிலாவெளி, மணல் மேடு, காலிக்கோட்டை, உனவடுன போன்றவை திகழ்கின்றன. இக்கடற்கரையோரங்களில் உள்ள கடற்பூக்களும் அங்கு பல நிறங்களில் நீந்தித் திரியும் மீன்களும் இந்த இயற்கை வளங்களில் ரசிக்கத் தக்கவை. அதேபோல, இலங்கையின் மலைநாடு மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஓர் இடமாகும். அநேக நாடுகளில் ஒரு வெப்பப் பகுதியில் இருந்து ஒரு குளிர்ச்சியான பகுதிக்குச் செல்ல இரண்டு மூன்று நாட்கள் பயணம் செய்ய வேண்டும். ஆனால், நம் நாட்டிலோ, ஒருசில மணித்தியாலங்களில் இத்தகைய பயணங்களை மேற்கொள்ளலாம். எமது சிறிய நாட்டில் இவ்வளவு சிறப்புக்கள் உள்ளன.

பாய்ந்தோடும் அருவிகள், நீர்வீழ்ச்சிகள், பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் தேயிலைத் தோட்டங்கள். அவற்றுக்கு நடுவில் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் என்பன மனதுக்கு இதமூட்டுகின்றன.

ஆனாலும், மக்கள் நம் இயற்கை வளங்களை சேதப்படுத்துவதானது வருந்தத்தக்கதாகும். ஆகவே, நாம் இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் அவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியதே சிறப்பானதாகும்.

எம்.அர்ஹம், தரம்-8[B],
கு/அல்-அக்ஸா மு.ம.வித்.,
பொல்கஹவெல.

# ரோஜாவே




எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எழில் கொஞ்சும் ரோஜாவே!
எத்தனை மலர்கள் இருந்தாலும்
என்னைக் கவர்வது நீதானே!

மஞ்சள், வெள்ளை, சிவப்பு என
பல்வேறு நிறங்களில் மிளிர்கின்றாய்
மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றாய்
மணமும் வீசி ஜொலிக்கின்றாய்!

மலர்களின் ராணியாய் திகழும் நீ
வண்டுகளை ஈர்த்து எடுக்கின்றாய்
கள்ளமில்லாத அழகுடனே
காட்சி தருகிறாய் ரோஜாவே!



அ.முஹமட்,
தரம் - 3[B],
மட்/பதுரியா வித்.,
காத்தான்குடி.

# குகை மனிதர்கள்



சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் 'பிற்கால குகை மனிதர்கள்' எனப்படுபவர். இவர்கள் 'முற்காலக் குகை மனிதர்களைவிட, அறிவில் சற்று உயர்ந்தவர்கள்.

பிற்காலக் குகை மனிதர்கள் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளின் தோலை ஆடையாக அணிந்தனர். இறைச்சியில் உள்ள கொழுப்பைப் பிரித்து எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்தினர். கற்களினாலும் விலங்குகளின் எலும்புகளினாலும் கூரிய ஆயுதங்களைச் செய்தனர். குகைச் சுவர்களில் ஓவியங்களை வரைந்தனர். இவர்கள் வாழ்ந்த காலம்தான் 'கற்காலம்' எனப்படுகிறது.

ஹஸ்னா லரீப்,
இ/பாலர் இயேசு
கன்னியர்
மடம்.

# மாவீரர் அலெக்ஸாண்டர்

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஊக்கம் என்பவற்றை உயிர் மூச்சாகக்கொண்டு விளங்கிய மாவீரர் அலெக்ஸாண்டர், மசிடோனியாவின் தலைநகரான பெல்லாவில் பிறந்தார். மசிடோனிய மன்னன் பிலிப் என்பவருக்கு மகனாக கி.மு 356 இல் பிறந்த இவர், இளமையிலேயே தலைசிறந்த வீரராகத் திகழ்ந்தார். இளம்பராயத்திலேயே படைக்குத் தலைமை தாங்கிப் போர்க்களம் செல்லும் அளவிற்கு வலிமையும் திறமையும் கொண்டிருந்தார். பிலிப் மன்னன் இறந்ததும் அலெக்ஸாண்டர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது அவருக்கு இருபது வயதுகூட ஆகவில்லை.

இவர் மாபெரும் தத்துவஞானி அரிஸ்டோட்டலின் மாணவனாக இருந்த காரணத்தால், போர் வீரனாக மட்டுமன்றி, அரசியல் ஞானியாகவும் ஒழுக்க சீலராகவும் திகழ்ந்தார். தாய்ப்பாசம், குருபக்தி, தெய்வ நம்பிக்கை, போன்ற அரிய குணங்கள் அலெக்ஸாண்டரிடம் இருந்தன.

முயன்றால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தையுடைய அலெக்ஸாண்டர், தனது 26 ஆவது வயதில் படையோடு சென்று பாரசீகம் முழுவதையும் வெற்றி கொண்டார். பின் ஆசியாவிற்குச் சென்று எதிர்ப்பட்ட நாடுகளை எல்லாம் வெற்றி கொண்டார். இவர் சென்ற திசைகளில் எல்லாம் வெற்றி பெற்றாரே தவிர, ஒருபோதும் தோல்வியைக் கண்டதேயில்லை. இவர் ஆசியாவில் ஒரு கிரேக்கப் பேரரசைப் புதிதாக நிறுவினார்.

முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு உதாரணமாக, விளங்கிய அலெக்ஸாண்டர் கி.மு 323 இல் கொடிய காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மரணமானார்.

என்.எஃப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.



# மோசடிக்கார நண்பன்

ரங்கனும் சோமனும் நண்பர்கள். ஒருநாள் ரங்கன் சோமனிடம் வந்து, "சோமா, நான் ஒரு கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. உன்னுடைய தங்க மோதிரத்தை ஒரு நாள் மட்டும் இரவல் கொடுப்பாயானால் கல்யாணத்திற்குப் போய் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுவேன்" என்றான்.

சோமனும் தன் விரலில் இருந்த தங்க மோதிரத்தைக் கழற்றி ரங்கனிடம் கொடுத்தான். மோதிரத்தை வாங்கிச் சென்ற ரங்கன் வெகுநாட்களாகியும் திரும்பி வரவில்லை. சோமன் அவன் வீட்டுக்குச் சென்றான்.

"என்ன ரங்கா! என்னிடமிருந்து தங்க மோதிரத்தை வாங்கிக்கொண்டு போனாயே! அதை ஏன் இன்னும் திருப்பித் தரவில்லை?" என்று கேட்டான்.

"தங்க மோதிரமா? என்னிடம் ஒரு தங்க மோதிரம் இருக்கும்போது நான் ஏன் உன்னிடம் இரவல் வாங்குகிறேன். இதோபார் என் மோதிரத்தை" என்று சோமனுடைய மோதிரத்தையே சோமனுக்குக் காண்பித்தான் ரங்கன்.

"அது என் மோதிரமாயிற்றே!" என்றான் சோமன்.

"போ, போ வீண் பேச்சுப் பேசாதே!" என்று சோமனை விரட்டி விட்டான் ரங்கன்.

சோமன் தான் ஏமாற்றப்பட்டதை நினைத்து மனம் வருந்தியவனாக நீதிபதியிடம் சென்றான்.

"ஐயா! என்னுடைய தங்க மோதிரத்தை இரவல் வாங்கிக்கொண்டு தன்னுடையதுதான் என்று ரங்கன் சாதிக்கிறான்" என்றான் சோமன்.

நீதிபதி ரங்கனை வரவழைத்து விசாரித்தபோது, "ஐயா இவன் பொய் சொல்கிறான். மோதிரம் என்னுடையதுதான்" என்றான்.

"நீங்கள் இருவரும் சொல்வதிலிருந்து உண்மையாகவே மோதிரம் யாருடையது என்று தெரியவில்லை. நாளை நீங்கள் இரண்டு பேரும் சபைக்கு வாருங்கள். ஒரு மத்தியஸ்தரை வைத்து இந்த மோதிரத்தை உரசிப் பார்த்து, இதன் மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம். மத்தியஸ்தர் மோதிரத்தின் மதிப்பு எவ்வளவு சொல்கிறாரோ அந்த தொகைக்கு மோதிரத்தை விற்று ஆளுக்குப் பாதியாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்றார் நீதிபதி.

மறுநாள் ஒரு பொற்கொல்லர் சபைக்கு வரவழைக்கப்பட்டார். அவரிடம் மோதிரம் கொடுக்கப்பட்டது. அவர் அதை உரைக்கல்லில் வைத்துத் தேய்த்தார். அப்படி தேய்க்கும்போது, அவர் அதிகமாக தேய்ப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த சோமன், "ஐயா மோதிரத்தை அதிகமாக உரசித் தேய்க்கிறீர்களே" என்று கத்தினான்.


ரங்கனோ, பேசாமல் இருந்தான். அடுத்து அந்தப் பொற்கொல்லர் அந்த மோதிரத்தின் மதிப்பை மிகக் குறைவாகச் சொல்லிவிட்டார்.

பொற்கொல்லர் சொன்ன விலையைக் கேட்டதும் சோமன் பதைபதைத்தான்.

"என்ன அநியாயம் இது! நான் வாங்கிய விலையில் கால் பங்குகூட இல்லையே! இதுதானா நீங்கள் போடும் மதிப்பு?" என்று கூச்சலிட்டான்.

இதைக் கேட்ட நீதிபதி ரங்கனைப் பார்த்து, "உண்மையாகவே இது உன்னுடைய மோதிரமாக இருந்தால் இந்நேரம் நீ பேசாமல் இருந்து கொண்டிருக்கமாட்டாய். உண்மையை வரவழைப்பதற்காக நான்தான் அதிகமாக உரசும்படியும், மதிப்பைக் குறைத்தும் சொல்லச் சொன்னேன். இதிலிருந்து மோதிரத்திற்கு உரியவர் யாரென்று தெரிந்துவிட்டது. சோமனை ஏமாற்றிய குற்றத்திற்காக உனக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கிறேன். இந்த மோதிரத்தை சோமனுக்குத் திருப்பிக் கொடுக்கிறேன்" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

ஆர்.டிசாந்தினி,
தரம் - 9[A],
நு/நல்லிளைப்பாற்றி மகளிர் பாட.,
நுவரெலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்.இல: 3849

மரியா ரெஜினா,
தரம் - 3[B],
கண்டிக்குளி ம.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3850

சஜாத் அஹமட்,
தரம் - 3,
அல்-காமியா அரபுக் கல்.,
வெல்லம்பிட்டி.



அங்.இல: 3851

ப.மதுஷன்,
தரம் - 5[D],
புனித அந்தோனியார்
கல்., கண்டி.



அங்.இல: 3852

எம்.சாஜித்,
தரம் 5[A],
அல்-ஹம்ரா வித்.,
செம்மணோடை.



அங்.இல: 3853

ஃபாறிக் அஷ்மத்,
தரம் - 5[A],
அறபா தே.பாட.,
மாத்தறை.



அங்.இல: 3854

பா.ஷாயினி,
தரம் - 6[B],
கண்டிக்குளி ம.கல்.,
யாழ்ப்பாணம்.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3855

எம்.ரஷாத்,
தரம் - 6,
முஸ்லிம் மத்.கல்.,
களுத்துறை.



அங்.இல: 3856

ஆர்.லிக்வேனியா,
உயர் தரம்,
ஹைலன்ஸ் மத்.கல்.,
ஹட்டன்.



அங்.இல: 3857

ர.நிருசன்,
தரம் - 8[B],
வ/த.ம.ம.வித்.,
வவுனியா.



அங்.இல: 3858

உ.ஹரிஸ்,
தரம் - 9[A],
மானிப்பாய் இ.கல்.,
மானிப்பாய்.



அங்.இல: 3859

க.அனாஜிதன்,
தரம் - 10[A],
கோ/விநாயகர் ம.வித்.,
கோளாவில்.




அங்.இல: 3860

எம்.அஹ்லக்,
தரம் - 11[A],
நுரைச்சோலை மு.ம.வித்.,
நுரைச்சோலை.

# நவீன உளவு வானூர்தி 'பென்டம் ரே'

'ஸ்டார் வோர்ஸ்' (Star Wars) மற்றும் 'ஸ்டார் ட்ரெக்' (Star Track) ஆகிய விஞ்ஞானக் கற்பனைக் கதைகளில் வரும் பறக்கும் விமானங்களைப் போல் தற்பொழுது வெறும் கற்பனையாக அல்ல; நிஜமாகவே விமானங்கள் உருவாகப்போகும் நாள் நெருங்கி வருகிறது என்றுதான் கூறவேண்டும். அந்தவகையில் அவ்வகை விமானங்களை சிறிது ஒத்த விமானமொன்று தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. செம்பும் தகரமும் கலந்து துப்பாக்கி தயாரிக்கப் பயன்படுத்தும் விசேட உலோக வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த 'விண்வெளி ஊர்தி' 'போயிங்' நிறுவனத்தினால் அண்மையில் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.





விமான ஓட்டியின் உதவியின்றிப் பறக்கும் இந்த உளவு பார்க்கும் விமானத்திற்கு பென்டம் ரே (Phantom Ray) என பெயரிட்டுள்ளனர். 36 அடி நீளமான இந்த விமானம் கடல் மட்டத்தில் இருந்து 40,000 அடியிலும் கூடிய உயரத்திற்கு வானில் மேலெழுந்து பறக்கக் கூடியது. இந்தளவு உயரமானது, சாதாரண விமானமொன்று உயரே எழும்பக்கூடிய உயரத்திலும் பார்க்க 10,000 அடி உயரம் கூடியதாகும். ஒலியின் வேகத்தை மிக நெருங்கும் வாய்ப்புள்ள இவ்விமானம் ஒரு மணித்தியாலத்திற்கு 614 மைல் வேகத்தில் பறக்கக் கூடியது.

இவ்விமானம் அமெரிக்க இராணுவத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குமுன் யுத்த விமானங்கள் மற்றும் பாரிய விமானங்களை உருவாக்கிப் பெயர் பெற்ற 'போயிங்' நிறுவனமே இதனைத் தயாரித்துள்ளது. இவ்விமானத்தின் இயந்திரம் விமானத்தின் உடல் பகுதியினுள் பொருத்தப்பட்டிருப்பதால் ஏவுகணைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. ரேடார்களில் சிக்கும் வாய்ப்பும் மிக அரிதாகவே இருப்பதால் மிக இலகுவாக எதிரிகளின் பிரதேசங்கள் ஊடாகப்பயணிப்பதில் 'பென்டம் ரே' சக்தி மிக்கது.

உளவு பார்க்கும் செயற்பாட்டுக்கு மற்றும் தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னேறிய, உயர்ந்த நவீன சக்தி படைத்த பறக்கும் விமானமாக இதனை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதாக, போயிங் சுய பாதுகாப்பு மற்றும் விண்வெளிப் பாதுகாப்பு நடவடிக்கை நிறுவனத்தின் பணிப்பாளர் டென்னிஸ் முய்லென்பர்க் (Dennis Muilenberg) தெரிவித்தார்.

தொடர்ந்து இரண்டு வருடங்களாக செயற்பட்டு உருவாக்கப்பட்ட 'பென்டம் ரே' வை அண்மையிலேயே பரீட்சித்துப் பார்க்க ஏற்பாடுகள் மேற்கொண்டபொழுதும் ஏற்கனவே ரகசியமான முறையில் அவ்விமானம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கும் என்பதே சிலரின் கருத்தாக இருக்கிறது. டிசம்பரில் பறக்க விடப்பட்டபின் ஆறுமாத கால எல்லைக்குள் பத்து வான் பயணங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கட்டுக் கதைகளை நிஜமாக்கி விண்வெளியை வெற்றி கொள்ளும் விமானமொன்று எமது தலைக்கு மேல் பறக்கும் காலம் எமது கைக் கெட்டிய தூரத்திலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)


# பறவைகளின் கால்கள்

அநேகமான பறவைகளின் கால் விரல்கள் நீளமாகவும் நகங்கள் கூர்மையாகவும் அமைந்திருக்கின்றன. இதற்குக் காரணம் அவை பறந்து வந்து மரக்கிளைகளில் அமரும்போது கீழே விழுந்து விடாது தாங்கிப் பிடித்துக்கொள்வதற்காகவாகும். கூடவே அந்தந்தப் பறவைகளின் செயற்பாடுகள், நடவடிக்கைகளுக்கு ஏற்ப அவற்றின் கால்கள் அமைந்துள்ளன.

சுற்றாடலில் பறந்து திரிந்து வாழும் பறவைகளை விட, நீரில் நீந்தும் அல்லது மிதக்கும் பறவைகளின் கால்விரல்களுக்கு இடுக்கில் அகலமான சவ்வு போன்ற அமைப்பு உள்ளதை அவதானிக்கலாம்.

அதேபோன்று, இரையை கால்களால் பிடித்து கொத்தித் தின்று வாழும் பறவைகளின் கால் விரல்கள் விரிந்தும் நீண்டும் நகங்கள் கூர்மையாகவும் அமைந்திருப்பதால் அவை இலகுவாக அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. அந்தவகையில், வேட்டையாடும் பறவைகளுக்கு அவற்றுக்கு ஏற்ற வகையில் தாக்கக்கூடிய பலமான விரல் ஒன்றும் அமைந்திருப்பதையும் காணலாம்.

அத்துடன், அத்தகைய பறவைகளின் பாதம் தடிப்பாகவும் பலமாகவும் அமைந்திருக்கும். இதன் மூலம் தமது இரைகளைத் தாங்கி உண்பதற்காக மட்டுமன்றி, அவற்றின் பாதுகாப்புக்குத் தேவைக்கு ஏற்றவகையில் இயல்பாகவே இவற்றின் கால்கள் அமைந்திருக்கின்றன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



எம்.ஹுஸ்னி, தரம் - 7,
இஹல கினியம மு.ம.வித்., கினியம.



எம்.ஆத்திப், தரம் - 11[B],
தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.



எஸ்.கிருஷாந்தன், தரம் - 8[B],
ரணபிம றோயல் கல்., கண்டி.



எஃப்.ஸஸ்னா, தரம் - 9,
தாருஸ்ஸலாம் மு.வித்., அழுத்கம.



எஃப்.எம்.பஹ்ரான்,
தரம் - 3, அல்-ஹுமைசரா தே.பாட.,
சீனங்கோட்டை.



எம்.அஸார், தரம் - 10[B],
அல்-இர்ஃபான் மத்.கல்., பந்தாவ.



க.தனுஜன், தரம் - 10[A],
கோ/விநாயகர் ம.வித்., கோளாவில்.



எஃப்.ஸைனப்,
பாலர் வகுப்பு, இக்ரா பாலர் பாட.,
திருகோணமலை.

## விஜய் ‘விழா உலா’ த.பெ.எண் 2037 கொழும்பு



மாறை/மின்ஹாத் தேசிய பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் ஏழு வயதிற்குக் கீழ்ப் பட்ட பிரிவிற்கான தடகளப் போட்டிகளில் செம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட, ‘பஸரா’ இல்லத்தைச் சேர்ந்த எம்.ஜே. எஃப்.மிஸ்ரா, தனக்குக் கிடைத்த வெற்றிக்கிண்ணத்துடன் காணப் படுகின்றார்.



திருமலையைச் சேர்ந்த பேரின்பராசா-ஜோதி தம்பதியரின் செல்வப் புதல்வன் மோகனகர்சன், 07.11.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.




காத்தான்குடி, ஒல்லிக்குளம் சமாதானக் கிராமத்தைச் சேர்ந்த ஸக்கி-மலிஹா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸீனத் மர்ஷதா, 12.11.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



யஹலத்தன்னையைச் சேர்ந்த பாயிஸ்-நஸீமா தம்பதியரின் செல்வப் புதல்வி எஃப்.ஆகிலா, 13.11.2010 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



வெலிகம, கோட்டகொடையைச் சேர்ந்த முபல்லல்-தைனப் தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மது அம்மார், 16.11.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எஃப்.இல்மா)*



ச.சஜனி, தரம் - 2[A],
கோப்பாய் நாவலர் த.வித்., கோப்பாய்.



கே.கோகிலவதனி, தரம் - 5,
விக்னேஸ்வரா த.ம.வித்., பன்வில.



எப்.பர்சிட், தரம் - 6[A],
நஸ்ரியா ம.கல்., சிலாபம்.




ம.சுலக்சனா,
தரம் - 6[B],
புதுக்குளம் ம.வித்.,
வவுனியா.




இந்த இதழில் நாம் குழந்தைகளின் பல்வேறு வகையான முகத்தோற்றங்களை வரைந்து பயிற்சி பெறுவோம்.

இதில் ஆண்-பெண் வேறுபாடுகளைக் காட்டுவதில் தலை முடி பிரதானமாக விளங்குகின்றது என்பதை இங்குள்ள படங்களை அவதானிப்பதன் ஊடாக விளங்கிக்கொள்வீர்கள்.



## ‘விழா உலா’ குறித்து உங்கள் கவனத்துக்கு...!

‘விழா உலா’ பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சின்னச் சிட்டுக்குருவியும் முள்மீன் சுள்ளானும் நல்ல நண்பர்கள். கோடை காலத்தில் சிட்டுக்குருவி நாள்தோறும் ஆற்றுக்குப் பறந்து வந்து, ''டேய், நண்பா வணக்கம்! நீ நலந்தானே?'' என்று சுகம் விசாரிக்கும்.

ஏதோ! நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நீயும் வாயேன் என் வீட்டுக்கு விருந்துக்கு அங்கே ஆழமான இடங்கள் பல அருமையாக இருக்கின்றன. தண்ணீரில் இழுப்பு இருக்காது. வகை வகையான நீர்ப்பூண்டுகள் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். தவளை முட்டைகளும் புழுக்களும் நீர்ப் பூச்சிகளும் தருவேன்'' என்று சொல்லிற்று முள்மீன்.

''நன்றி, நண்பா! உன் வீட்டுக்கு விருந்துக்கு மகிழ்ச்சியோடு வந்திருப்பேன். ஆனால், தண்ணீர் எனக்கு ஆகாதே. கூரை மேல் உள்ள என் கூட்டுக்கு நீ ஒரு தடவை வாயேன். காட்டுப் பழங்கள் உனக்குத் தின்னத் தந்து உபசரிப்பேன். என்னிடம் பழத்தோட்டமே இருக்கிறது. அப்புறம் ரொட்டித் துண்டும் ஓட்ஸ் தானியமும் சர்க்கரைக் கட்டியும் உயிருள்ள கொசுவும் தேடிப் பிடிப்போம். உனக்கு சர்க்கரைக் கட்டி பிடிக்கும் அல்லவா?''

''அது எப்படி இருக்கும்?''

''வெள்ளையாக இருக்கும்''

''ஆற்றிலே உள்ள கூழாங்கற்கள் மாதிரியா?''

''அப்படித்தான். ஆனால், கொத்திப் பார்த்தால் இனிக்கும். உன் கூழாங்கல்லைத் தின்ன முடியாதே. வாறியா பறந்து போவோம் கூரைக்கு?''

''வேண்டாம் நண்பா! எனக்குப் பறக்கத் தெரியாது, தவிரவும் காற்றில் எனக்கு மூச்சு முட்டும். நாம் இருவரும் தண்ணீரில் சேர்ந்து நீந்துவோம். வாயேன்.

''தண்ணீரிலேயே கிடப்பது உனக்கு அலுத்துப் போகாதது எப்படி? தண்ணீரில் ஒரே ஈரம், தடிமல் வேறு பிடித்து விடும்'' ஆனால், உனக்குத் தடிமன் பிடிக்காதா'' என்று வியப்புடன் கேட்டது சிட்டுக்குருவி.

முள் மீனோ, ஆச்சரியத் துடன் கேட்டது, ''ஆமாம் நண்பா, பறப்பது உனக்கு எப்படி அலுக்காமல் இருக்கிறது? வெயிலில் ஒரே வெக்கையாய் இருக்கும். மூச்சு முட்டிப் போகுமே. என்னுடைய இடம் எப்போதும் குளுகுளுவென்று இருக்கும். வேண்டியபடி நீந்தலாம். பயப்படாதே. கோடையில் எல்லோரும் இந்த ஆற்றுத் தண்ணீரில் இறங்கிக் குளிக்கிறார்கள். ஆனால், கூரை மேல் உன்னிடம் யார் வருவார்கள்?''

''எத்தனை பேர் வருகிறார்கள் தெரியுமா! எனக்கு உன்னைப் போல் நண்பன் ஒருவன் இருக்கிறான். புகைபோக்கி துடைக்கும் யாஷா. அவன் ஓயாமல் என் இருப்பிடத்துக்கு வருவான். குதூகலப் பேர்வழி அந்தப் புகைபோக்கித் துடைப்பான். எப்போதும் பாட்டுக்கள் பாடிக் கொண்டிருப்பான். புகைபோக்கியைச் சுத்தம் செய்து கொண்டே பாடுவான். வேலை முடிந்ததும் இளைப்பாற உட்கார்ந்து, ரொட்டியை எடுத்துத் தின்பான். நான் பொருக்குகளைக் கொத்துவேன். மனமொத்த நண்பர்கள் நாங்கள். அதனால், எனக்கும் குதூகலமாக இருக்கும்''

## மீனுக்கும் குருவிக்கும் ஏற்படும் கஷ்டங்கள்



நண்பர்களான மீனுக்கும் குருவிக்கும் நேர்ந்த சங்கடங்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை. உதாரணமாக, பனிக்காலம். பாவம், சிட்டுக்குருவி குளிரில் விறைத்துப் போகும். சில நாட்களில் கடுங்குளிர் அடிக்கும். நெஞ்சே குளிரில் உறைந்து விடுமோ என்று தோன்றும். சிட்டுக்குருவி தனது இறகுகளைச் சிலுப்பிக்கொண்டு, கால்களை உடம்புக்கு அடியில் முடக்கியபடி உட்கார்ந்திருக்கும். குளிரிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி, புகை போக்கிக்குள் புகுந்து எங்காவது ஒட்டிக்கொண்டு கொஞ்ச நேரம் சூடேற்றிக் கொள்வதுதான். ஆனால், அதிலும் ஆபத்து உண்டு.


தன் அருமை நண்பன் புகைபோக்கித் துடைப்பானின் கவனப்பிசகால் சிட்டுக்குருவி ஒரு தடவை சாகப்பார்த்தது. ஒருநாள் புகைபோக்கித் துடைப்பான் வந்து இரும்புக்குண்டு கட்டிய துடைப்பங் கோலைப் புகைபோக்கிக்குள் திடீரென்று நுழைத்தான். சின்னச் சிட்டுக்குருவியின் மண்டை உடையாமல் மயிரிழையில் தப்பிற்று. அது புகைப்போக்கிக்கு உள்ளிருந்து விர்ரென்று வெளியே பறந்து வந்தது. (தொடரும்...)

## முற்றிய கதிர்கள்

அத்தியூரில் சின்னச்சாமி என்ற மனிதருக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. தன் ஒரே மகன் பிரபு படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்டார். எனவே, தன் தங்கையின் வீடு நகரத்தில் இருப்பதால், அங்குள்ள புகழ் பெற்ற பாடசாலையில் படிக்க வைத்தார். மகனும் நன்றாகப் படித்தான்.

விடுமுறைக்கு ஊருக்கு வருவான் பிரபு. தன் பெற்றோர் விவசாயிகளாக இருப்பதால் அவர்களை மதிக்கமாட்டான். தன் மாமாவைப் போல, பெற்றோர் பெரிய உத்தியோகத்தராக இல்லையே... தன்னுடைய நண்பர்களின் பெற்றோர் எல்லோரும் பெரிய பெரிய பதவிகளிலும் வியாபாரிகளாகவும் இருப்பதால், தன் பெற்றோரை கேவலமாக நினைத்தான். இதனால், சின்னச்சாமி மிகவும் மனம் வருந்தினார். 'நம் பிள்ளையின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என நினைத்துத்தான் நகரத்தில் படிக்க வைத்தோம். ஆனால், இவன் நம்மைப் பெற்றோர் என்று சொல்வதற்கே வெட்கப்படுகிறானே...'' என நினைத்தார்.

அன்று மாலை சின்னச்சாமி கடைத்தெருவுக்குப் போக



வேண்டியிருந்தது. தன் மனைவியிடம் ''வயலுக்குப் போய் கதிர்கள் முற்றிவிட்டதா.... எப்போது கதிர் அறுக்க வேண்டும் என்று நம்ம கண்ணுச்சாமிக்கிட்ட சொல்லி பார்த்துட்டு வரச்சொல்லு'' என்றார்.

''மகனுக்கு சுகமில்லையேன்று கண்ணுச்சாமி மருத்துவமனைக்குப் போயிருக்கான், மற்ற வேலையாட்களும் வெளியே போயிட்டாங்க, நான் போய் பார்த்து வரட்டுமாங்க'' என்றார் அலமேலு.

''வேண்டாம். இந்த வெயில்ல நீ எங்க போய் பார்க்கிறது. நம்ம பிள்ளை பிரபு வண்டி வச்சிருக்கிறான்தானே அதில் போய்ட்டு வா. பிள்ளைக்கு ஒன்றும் தெரியாது. அது படிச்ச பிள்ளை... நீதான் நல்லா பார்த்துட்டு வரணும்'' என்றார். தனக்கு ஒன்றும் தெரியாது என்று அப்பா சொன்னதைக் கேட்டதும் 'சுருக்'கென்றது பிரபுவுக்கு. உயர் வகுப்புப் படிக்கும் நான், என் வகுப்பிலேயே முதல் மாணவன். என்னிடம் வந்து எல்லோரும் டவுட் கேட்கும்போது... கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராகி விட்டதா? என்பதைக் கண்டுபிடிக்க எனக்குத் தெரியாதா?

''அம்மா நீங்க இங்கேயே இருங்க.... நான் போய் பார்த்துட்டு வாறேன்'' என்றான் பிரபு.

''மகனே.. உனக்குத் தெரியாதப்பா இந்த வேலை எல்லாம்...'' என்றார் அம்மா.

''எனக்குத் தெரியாதா.... நான்தான் எங்க ஸ்கூல்ல படிப்பு மற்றும் அனைத்துப் போட்டிகளிலும் பெஸ்ட் ஸ்டூடன்ட். என்னோட திறமையைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்றான். சிறிது நேரத்தில் பைக்கில் சிட்டாகப் பறந்தான். இரவில் திரும்பி வந்த சின்னச்சாமி மகனை பார்த்தார்.

''அப்பா பாதி நெற்கதிர்கள் வளர்ச்சி இல்லாமல் அப்படியே தரையில் சாய்ந்து கிடக்கின்றன. சிறிது பயிர்கள்தான் நன்கு வளர்ந்து நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றை நாளையே அறுவடை செய்துவிட்டால் நல்லது. இல்லையென்றால் அந்தக் கதிர்களும் அப்படியே சாய்ந்துவிடும். நமக்கு ரொம்ப நஷ்டமாகி விடும்'' என்றான். மகனது அறியாமையை எண்ணிப் புன்சிரிப்புச் சிரித்தார் சின்னச்சாமி.

''பிரபு! தரையில் சாய்ந்து கிடக்கும் நெற்பயிர்கள் தான் முற்றிய கதிர்கள். நிமிர்ந்து நிற்கும் பயிர்கள்தான் உண்மையிலேயே செழித்து வளராதவை. இவற்றை நன்கு வளர்ந்த பயிர்களோடு அறுவடை செய்தால் இவற்றிலிருந்து ஒரு நெல் மணி கூடத் தேறாது.. நிமிர்ந்த பயிர்களும் என்று முற்றிச் சாய்ந்து தரையில் கிடக்கிறதோ, அன்றுதான் அறுவடை செய்ய வேண்டும்'' என்றார்.

அவமானத்தால் குறுகிப் போனான் பிரபு. தனக்கு எல்லாமே தெரியும். தெரியாதது ஒன்றும் இல்லை. கிராமத்து மனிதரான தன் அப்பாவுக்கு என்ன தெரியும் என்று நினைத்துக் கர்வப்பட்டவன் வெட்கத்தில் தலைகுனிந்தான். இதுதான் சமயம் என உணர்ந்த சின்னச்சாமி, ''மகனே, நன்கு வளர்ந்து தலை தாழ்ந்து கிடக்கும் பயிர்களை, பணிவுடைய பெரியவர்களுக்கு உதாரணமாகச் சொல்வார்கள். நிமிர்ந்து நிற்கும் பயிர்களைத் தலைக்கனம் கொண்டவர்களுக்கு ஒப்பிடுவர். தலைக்கனம் எப்போதும் அழிவைத் தரும். தாழ்மையான குணமோ உயர்வைத் தரும்'' என்றார் இரு பொருள்பட.

தன் தவறை உணர்ந்த பிரபு, ''அப்பா என் தவறை நான் உணர்ந்துவிட்டேன். என் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக நகரத்தில் படிக்க வைத்து, எவ்வளவோ பணம் செலவு செய்து நீங்கள் செய்யும் தியாகத்தை மறந்துவிட்டு, உங்களை மிகவும் புண்படுத்திவிட்டேன். என்னை மன்னிச்சிடுங்கப்பா! இனி எப்போதுமே எனக்குத்தான் எல்லாம் தெரியும் என நினைக்கமாட்டேன். முற்றிச் சாய்ந்த நெற்கதிர்கள் போல அடக்கமா இருப்பேன்'' என்றான். இதுகேட்ட சின்னச்சாமி மகிழ்ச்சியில் திளைத்தார்.

## மீன்களால் நீரில் அசைவற்று நிற்க முடிவது எப்படி?

மீன்களுக்கு நீரில் நீந்துவதற்கான திறமை மட்டுமல்ல, நீரில் அப்படியே அசைவற்று நிற்கக்கூடிய திறமையும் உண்டு. மீன்காட்சி சாலைகளில் உள்ள மீன்களைக் கவனித்துப் பார்த்தால் இது தெரியும். சில சமயங்களில், உடலில் எப்பகுதியையும் அசைக்காமல் மீன், நீரின் மேற்பகுதியிலோ, நடுப்பகுதியிலோ அப்படியே அசைவற்று நிற்பதைப் பார்க்கலாம்.

மீன்கள் இப்படி நீரில் நிலையாக நிற்பதற்கு, அவற்றின் உடலுக்குள்ளே உள்ள பிரத்தியேகமான வாயுப் பை உதவி செய்கிறது. ஏறத்தாழ, ஒரு பலூனின் வடிவில் உள்ள இந்த வாயுப் பை, மீனின் வயிற்றிற்கும், குடலுக்கும் மேலே அமைந்திருக்கிறது. மீனின் மொத்த உடற்பரப்பில் ஏறத்தாழ 5 இலிருந்து 6 சதவிகிதம் வரை இந்தப் பை இருக்கும்



ஒக்ஸிஜன், கார்பன்டை ஒக்சைட் நைட்ரஜன் ஆகிய வாயுக்களின் கலவை இந்தப் பையில் நிறைந்திருக்கும்.

பைக்குள் உள்ள வாயுவின் பரப்பை அதிகரிப்பதாலும் குறைப்பதாலும் தன் உடல் எடையை முறைப்படுத்துகிறது. அதனால், நீருக்குள் அசைவற்று ஆழ்ந்திருக்கிறது. வாயுப் பை முழுமையாக நிறைந்திருக்கும்போது, மீன் நீரின் மேல்தளத்தில் மிதந்து கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலா, வசந்தி, ரமணி மற்றும் மாமி ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.



**වසන්ති: මාලා නංගි මෙහේ එන්න.**
மாலா நங்கி மெஹே என்ன.
வசந்தி: தங்கை மாலா இங்கே வாருங்கள்.

**මාලා: ඇයි අක්කේ?**
எய் அக்கே?
மாலா: ஏன் அக்கா?

**වසන්ති: අපි මේ කේක් වැඩේ පටන්ගමු. මගේ යාලුවෙකුත් එනව කිව්වා උදව්වට.**
அபி மே கேக் வெடே படன்கமு.
மகே யாலுவெகுத் எனவ கிவ்வா உதவ்வட.
வசந்தி: நாங்கள் இந்த கேக் வேலையை ஆரம்பிப்போம்.
என்னுடைய தோழி ஒருவரும் உதவிக்கு வருவதாகச் சொன்னார்.

**මාලා: මම මොනවද අක්කේ කරන්න ඕනේ ?**
மம மொனவத அக்கே கறன்ன ஓணே?
மாலா: நான் என்ன செய்ய வேண்டும் அக்கா?

**වසන්ති: මම කපන කේක් කෑලි මේ තෙල් කඩදාසියේ ඔතන්න.**
மம கபன கேக் கேளி மே தெல் கடதாசியே ஒதன்ன.
வசந்தி: நான் வெட்டுகின்ற கேக் துண்டுகளை இந்த எண்ணெய்க் கடதாசியில் சுற்றுங்கள்.



**මාලා: ආ... එච්චරද?**
ஆ... எச்சறத?
மாலா: ஆ... அவ்வளவுதானா?

**වසන්ති: ඒවා මේ පෙට්ටිවල දාන්නත් ඕනේ.**
ஏவா மே பெட்டிவள தான்னத் ஓணே.
வசந்தி: அவற்றை இந்தப் பெட்டிகளுக்குள் போடவும் வேண்டும்.

**මාලා: අක්කේ... මෙන්න ඔයාගේ යාලුවා ඇවිත්.**
அக்கே... மென்ன ஒயாகே யாலுவா எவித்.
மாலா: அக்கா.... இதோ உங்கள் தோழி வந்திருக்கிறார்.

**වසන්ති: එන්න රමණී, අපි වැඩ පටන් ගත්තා.**
என்ன ரமணி, அபி வெட படன் கத்தா.
வசந்தி: வாருங்கள் ரமணி, நாங்கள் வேலையைத் தொடங்கிவிட்டோம்.

**රමණී, ඔයා නංගි ඔතන කේක් කෑලි මේ පෙට්ටිවල දාන්න.**
ரமணி, ஒயா நங்கி ஒதன கேக் கேளி மே பெட்டிவள தான்ன.
ரமணி, நீங்கள் தங்கை சுற்றுகின்ற கேக் துண்டுகளை இந்தப் பெட்டிகளுக்குள் இடுங்கள்.

**රමණී: හොඳයි වසන්ති මම ඒක කරන්නම්.**
ஹொந்தய் வசந்தி மம ஏக கறன்ன.
ரமணி: நல்லது வசந்தி நான் அதைச் செய்கிறேன்.

**නැන්දා: ළමයින්ට දැන් මහන්සි ඇතිනේ. මේ බීම එක බොන්න.**
லமய்ன்ட தென் மஹன்சி எதினே. மே பீம எக பொன்ன.
மாமி: பிள்ளைகளுக்கு இப்போது களைப்பாய் இருக்கும்தானே.
இந்தப் பானத்தை அருந்துங்கள்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* நாங்கள் கேக் வேலையை ஆரம்பிப்போம்.
**අපි කේක් වැඩේ පටන්ගමු.**

i. கேக் துண்டுகளை எண்ணெய்க் கடதாசியில் சுற்றுங்கள்.
..........................................................................
ii. உங்களுடைய தோழி வந்திருக்கிறார்.
..........................................................................
iii. இந்தப் பானத்தை அருந்துங்கள்.
..........................................................................






நிகழ்காலத் தொடர் வாக்கியத்துடன் (Present Continuous Tense), நிகழ்கால வினை முற்றுத் தொடர் வாக்கியத்தை (Present Perfect Continuous Tense) மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) You are listening to the radio lessons now.
நீ இப்பொழுது வானொலிப் பாடங்களை செவிமடுத்துக்கொண்டு இருக்கின்றாய்.

(ஆ) You have been listening to the radio lessons since morning.
நீ காலையில் இருந்து வானொலிப் பாடங்களை செவிமடுத்து வருகின்றாய்.

(அ) You are listening.
நீ செவிமடுத்துக்கொண்டு இருக்கின்றாய்.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஆ) You have been listening.
நீ செவிமடுத்து வருகின்றாய்.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம்-Present Perfect Continuous Tense)

**குறிப்பு: மேற்படி நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'Have been listening' எனும் வினைச்சொற்றொடரை, ஒரு கூட்டு வினைச்சொல்லாகக் (Compound Verb) கருத வேண்டும் என்பது ஆங்கில இலக்கண மரபாகும். அதற்கேற்றவாறே தமிழிலும் அர்த்தத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

(இ) We are watching the situation now.
நாங்கள் இப்பொழுது நிலைமையை அவதானித்துக்கொண்டு இருக்கின்றோம்.

(ஈ) We have been watching the situation for the last one week.
கடந்த ஒரு வாரகாலமாக, நாங்கள் நிலைமையை அவதானித்து வருகின்றோம்.

(இ) We are watching.
நாங்கள் அவதானித்துக்கொண்டு இருக்கின்றோம்.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஈ) We have been watching.
நாங்கள் அவதானித்து வருகின்றோம்.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் - Present Perfect Continuous Tense)

(உ) They are learning English now.
அவர்கள் இப்பொழுது ஆங்கிலம் கற்றுக்கொண்டு இருக்கின்றனர்.

(ஊ) They have been learning English for the last six months.
கடந்த ஆறு மாதங்களாக அவர்கள் ஆங்கிலம் கற்று வருகின்றனர்.

(உ) They are learning.
அவர்கள் கற்றுக்கொண்டு இருக்கின்றனர்.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஊ) They have been learning.
அவர்கள் கற்று வருகின்றனர்.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் - Present Perfect Continuous Tense)

(எ) The children are learning.
அந்தச் சிறுவர்கள் கற்றுக்கொண்டு இருக்கின்றனர்.

(ஏ) The children have been learning.
அந்தச் சிறுவர்கள் கற்று வருகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் தேர்தலை ஏற்க மறுப்பு



மியன்மாரில் நடைபெற்றுள்ள தேர்தலை உலக நாடுகள் பல ஏற்க மறுத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேர்தல் வழிமுறைகள் எவையும் பின்பற்றப்படாத நிலையில் நடைபெற்ற இத்தேர்தலை நியாயமானதாகக் கருத முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளன.

இராணுவத்தின் ஆதரவுள்ள கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு அரச உத்தியோகஸ்தர்கள் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் இதனால், சுதந்திரமாக வாக்களிக்கத் தம்மால் முடியவில்லை என்றும் வாக்காளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ரஷ்ய ஜனாதிபதியின் 'குரில்' தீவு விஜயம்




ரஷ்யாவும் ஜப்பானும் உரிமை கோரும் 'குரில்' தீவிற்கு ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெட்வதேவ் விஜயம் செய்தமையால் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக, ரஷ்யாவிற்கான ஜப்பான் தூதுவரை தமது நாட்டிற்கு மீள அழைத்துக்கொண்டது ஜப்பான்.

ரஷ்ய ஜனாதிபதியின் 'குரில்' தீவு விஜயத்தையொட்டி ஜப்பான் மக்களும் ஜப்பானிய ஊடகங்களும் தமது பலத்த எதிர்ப்பை

### ஜப்பானின் எதிர்ப்பு

வெளிக்காட்டியதுடன், ஜப்பானியப் பிரதமர் மௌனமாக இருப்பது குறித்தும் விமர்சித்துள்ளனர்.



இருப்பினும், இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி 'குரில்' தீவைக் கைப்பற்றிக்கொள்ளும் எண்ணம் தமக்குக் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பல வருடங்களாக, மேற்படி தீவு குறித்து எழுந்துள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு இரண்டு நாட்டின் அரசாங்கங்களும் தவறியுள்ளன என்று அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஈரான் பேசத் தயார்

வாதப்பிரதிவாதங்களை எழுப்பியுள்ள ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாக மீண்டும் கலந்து பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக ஈரானின் வெளிவிவகார அமைச்சர் மனோச்சர் மோதாஹி தெரிவித்துள்ளார்.



ஈரான் தனது அணுசக்தியைப் பயன்படுத்தி அணு ஆயுதங்களைத் தயாரிக்க உத்தேசித்திருப்பதாக மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருவதும் இது தொடர்பாக கடந்த ஒக்டோபர் மாதம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும் இடைநடுவில் அப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே மீண்டும் பேசுவதற்குத் தயார் என்று ஈரான் தற்போது அறிவித்துள்ளது.

# கியூபா விமான விபத்தில் 68 பயணிகள் மரணம்






கியூபாவின் தலைநகர் ஹவானாவை நோக்கிப் பயணம் செய்த பயணிகள் விமானமொன்று விபத்திற்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த அனைவரும் மரணமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானத்தில் வெளிநாட்டவர்கள் 28 பேரும், உள்நாட்டவர்கள் 40 பேருமாக மொத்தமாக 68 பேர் பயணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பிரதேசத்தில் புயல் காற்று ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக ஏற்கனவே முன்னறிவிப்புக்கள் விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி விமான விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்துக் குறித்தான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அற்லஸ் கேள்வி - 282**

**கேள்வி:** 'குரில்' என்ற தீவிற்கு உரிமை கோரும் இரண்டு நாடுகளும் எவை?

**சரியான விடை..............................**

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 282,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 280 இன் சரியான விடை: தென்கொரியா**

**பரிசு பெறுவோர்**

கே.பாத்திமா ஷஹானா,
81, பிரதான வீதி, பலாங்கொடை.

ஏ.ஃபாத்திமா சஜா,
224, சீனி மரிக்கார் வீதி,
அட்டாளைச்சேனை.

பி.யூட் கனிஸ்ரன்,
19, சென் ஜேம்ஸ் வீதி, குருநகர்.

# தெரிந்து கொள்வோம்



- ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு மையம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
  பென்டகன்



- சோவியத் ரஷ்யாவின் தந்தை என்று கருதப்படுபவர் யார்?
  வி.ஐ.லெனின்
- ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் என்ன பெயரில் அழைக்கப்படுகின்றது?
  வெள்ளை மாளிகை (White House)





- ரோம் நகருக்கு அருகாமையில் செல்கின்ற ஆற்றின் பெயர் என்ன?
  டைபர் ஆறு



- இஸ்ரேலின் தலைநகர்
  ஜெருசலேம்



- இந்தோனேஷியாவின் தலைநகரம்
  ஜகார்த்தா
- நேபாளத்தின் தலைநகர்?
  காத்மண்டு





- உலகிலேயே மிகப்பெரிய 'மணி' எது?
  Tsar Bell - மொஸ்கோ



- வத்திக்கான் ராஜ்யத்தின் நிலப்பரப்பளவு எவ்வளவு?
  44 ஹெக்டேயர்



- பிரிட்டனிடமிருந்து முதல் தடவையாக சுதந்திரம் பெற்ற ஆபிரிக்க நாடு எது?
  கானா
- தாய்லாந்து நாடு ஆரம்பகாலத்தில் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
  போமோஸா





- ஆரம்பகாலத்தில் 'எபிசீனியா' என்று அழைக்கப்பட்ட நாடு தற்போது என்ன பெயரில் அழைக்கப்படுகின்றது?
  எதியோப்பியா



- அமெரிக்காவில் மூன்று தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் யார்?
  ஃபிரங்க்லின் ரூஸ்வெல்ட்
- ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான பௌத்த மதத்தவர்கள் வாழும் நாடு எது?
  ஜப்பான்



- இஸ்லாம் மத அடிப்படையில் 'ஹராம்', 'ஹலால்' என்று குறிப்பிடப்படுவது எவற்றை?
  ஹராம் - தடைசெய்யப்பட்டவை
  ஹலால் - அனுமதி வழங்கப்பட்டவை
- உலகிலேயே மிகப்பெரிய தேவாலயம் எது?
  வத்திக்கான் புனித பீட்டர் பெசிலிக்கா ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் 2011 மைதான செப்பனிடலை துரிதப்படுத்துமாறு பணிப்பு



அடுத்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. அதன்படி, போட்டிகள் நடைபெறுவதற்கு ஒருசில மாதங்களே இருக்கின்ற நிலையில் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்கள், அரங்கங்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளனவா.? என்பது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை மேற்பார்வை செய்திருந்தது. இந்தியாவிலுள்ள சில கிரிக்கெட் அரங் கங்கள் இன்னும் முழுமையான தரநிலைக்கு வரவில்லை என்பது இதில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் டிசம்பர் மாதக் கடைசிக்குள் இந்த செப்பனிடல், தரப்படுத்தல் பணிகள் யாவும் பூர்த்தியாதல் வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை இந்திய அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது. இதனால், மேற்படி பணிகள் துரிதப்படுத்தப்பட்டி ருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# தெ.ஆபிரிக்க வீரர் மகாயா நிட்னி ஓய்வு




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மகாயா நிட்னி கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதையடுத்து அவருக்கு கௌரவிப்பு விழாவொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி மகாயா நிட்னிக்கான மேற்படி கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது'

தென்னாபிரிக்காவில் அண்மையில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட் டப் போட்டிகள் நடைபெற்ற 'மோசஸ் மாபிட்டா' என்ற அரங்கில் நடைபெற வுள்ள இந்த விழாவில் ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு பிரபலங்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மகாயா நிட்னி 101 டெஸ்ட் போட்டி களில் கலந்துகொண்டு 390 டெஸ்ட் விக்கெட்களையும், 173 ஒருநாள் போட்டி களில் கலந்துகொண்டு 266 விக்கெட்களை யும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உலக கிரிக்கெட் கிண்ணம் பாரிய மீன் தொட்டியில்....!

2011 ஆம் வருட உலகக் கிண்ண கிரிக்கெட் போட் டிகள் நடைபெறுவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. அதன்படி, உலகக் கிண்ணப் போட்டிகளுக் கான கிண்ணத்தை காட்சிப்படுத்தும் அடையாளமாக மேற்படி கிண்ணமானது பாரிய மீன்தொட்டியொன்றில் பார்வைக்கு வைக்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் டுபாயில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கண்காட்சி நிகழ்வின் போது, தென் ஆபிரிக்க வீரர்களான மோக்கல் மற்றும் டேல் ஸ்டெயின் ஆகிய இரண்டு பேரும் சுழியோடிகள் அணியும் பாதுகாப்பு ஆடைகளை அணிந்தவாறு குறித்த கிண்ணத்தை ஏந்தியவாறு இந்தப் பாரிய மீன்தொட்டியினுள் சென்று அதனைக் காட்சிப்படுத்தினர்.

# நிட்னிக்கு மெக்மிலன் பாராட்டு!



தெ.ஆபிரிக்க வீரர் மகாயா நிட்னி ஓய்வு பெறுவதையிட்டு முன்னாள் வீரர் மெக்மிலன் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அதாவது, "நிட்னி தெ.ஆபிரிக்க அணிக்காக செய்த அர்ப்பணிப்பு மறக்க முடியாதவை. இவரது ஓய்வு அணிக்குப் பாரிய இழப்பாகும். அதனை ஈடு செய்வது கடினமாகும். எத்தகைய ஒரு சூழ்நிலையிலும் இயல்பாகவே பந்து வீசும் திறமையைக் கொண்டவர் அவர். எதிரணித் துடுப்பாட்ட வீரருக்கு களத்தில் பாரிய அச்சுறுத்தலாக இருந்தாலும் எப்போதுமே சிநேகபூர்வமான நடத்தை கொண்டவராகவே இருந்துள்ளார்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# டென்னிஸ் வீராங்கனையின் ஓய்வு



ரஷ்யாவின் தலைசிறந்த டென்னிஸ் வீராங்கனையான எலினா டெமன்டிவ் டென்னிஸ் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். திருமண வாழ்க்கையில் இணையவுள்ளமையினாலேயே ஓய்வு பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் செம்பியனாகிய எலினா அண்மையில் நடை பெற்ற சர்வதேச மகளிர் கிண்ண டென்னிஸ் போட்டி யில் கலந்து கொண்ட போதே இந்த அறிவித்தலை அவர் மேற்கொண்டார். சில காலங்களின் பின்னர் மீண்டும் டென்னிஸ் போட்டிகளில் ஈடுபடுவீர் களா? என்று கேட்கப் பட்டபோது 'அவ்வாறு இருக்காது' என்று அவர் உறுதியாக மறுத்துள்ளார். இது தனது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு என்றும் இது தொடர் பாக மேலதிக மாக எதனையும் கூற விரும்ப வில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார்.

# 'ஹொங்கொங்' கிண்ணம் அவுஸ்திரேலியா வசம்



ஹொங்கொங் நாட்டில் நடைபெற்ற அணிக்கு 6 பேரைக் கொண்ட 'சிக்சேர்ஸ்' கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றி யுள்ளது.

10 நாடுகளின் கிரிக்கெட் அணிகள் கலந்துகொண்ட மேற்படி போட்டிகளில் இரண்டாவது சுற்றில் இந்தியா-இலங்கை அணி கள் போட்டியிட்டதில் இலங்கை 7 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. தொடர்ந்து நியூஸிலாந்துடன் மோதிய இந்திய அணி 5 ஓட்டங் களால் நியூஸிலாந்திடமும் தோல்வி அடைந்தது.

எனவே, இந்திய அணி அரையிறுதி வாய்ப்பை இழந்த அதேநேரம் பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் அரையிறுதியில் போட்டி யிட்டன.



அதன்படி, அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தானும் தென்னாபிரிக்காவும் மோதியதில் பாகிஸ்தான் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. அதேவேளை, அவுஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

எனவே, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் இறுதிப் போட்டி யில் போட்டியிட்டதில் ஒவ்வொரு ஓவருக்கும் எட்டுப் பந்துகள் என்ற அடிப்படையில் 5 ஓவர்கள் வழங்கப்பட்டதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்களுக்கு 132 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 4 விக்கெட்களுக்கு 135 ஓட்டங்களைப் பெற்று செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகம் அழிய 370 கோடி ஆண்டுகள் ஆகும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். கெலிஃபோர்னிய பல்கலைக் கழக பௌதிகவியல் துறை விஞ்ஞானி ரபேல் பவுசோ தலைமையிலான குழுவினரே, இதுகுறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். உலக முடிவு பற்றி அவர்கள் கூறியுள்ளதாவது;

அண்டவெளியில் நீர்க்குமிழி போன்ற சில ரசாயனக் குமிழிகள் உருவாகியுள்ளன.




அண்டவெளி உட்பட எல்லாமே அழியும். ஆனால், அதற்கு 370 கோடி ஆண்டுகள் ஆகும் என ரபேல் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கெலிஃபோர்னிய பல்கலைக்கழக ஆய்வுக்குழுவினரின் இந்தக் கருத்தை அவுஸ்திரேலிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மறுத்துள்ளனர். அமெரிக்க ஆய்வுக்குழு ஏதோ புள்ளியியல் விபரங்களையே வெளியிட்டுள்ளது.

# பிரபஞ்சத்தின் ஆயுள் 370 கோடி ஆண்டுகள்?

அவற்றில் ஏராளமான குமிழிகள் நாளுக்கு நாள் அளவில் பெரிதாகிக் கொண்டே போகின்றன. பல குமிழிகள் உடைந்து மறைந்து விடுகின்றன. நீர் கொதிக்கும்போது ஏற்படும் குமிழிகள் போல் அவை உள்ளன. இதுபோன்ற குமிழிகள் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்கு பெரிதாகும்போது, பிரபஞ்சம் பற்றிய அவர்களுடைய கணக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு முடிவே கிடைக்காது. இதனால்தான் பிரபஞ்சம் அழியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# டைனோசர்கள் அழிந்தது விண்கற்களாலா?

டைனோசர்கள் பற்றி அறிய நாம் எப்போதுமே ஆர்வத்தோடு இருப்போம். 'ஜுராசிக் பார்க்' திரைப்படத்தினை அடுத்து இந்த ஆர்வம் மேலும் இரட்டிப்பாகியது எனலாம்.

பூமியில் சுமார் 1300 வகையான ஊர்வன இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் டைனோசர். ஒரு காலத்தில் இது பூமியின் முக்கிய உயிரினமாகத் திகழ்ந்தது. இந்த ராட்சத உயிரினம் எப்படி அழிந்துபோனது என்பது இன்றுவரை அறியப்படாத புதிராகவே உள்ளது.

ஏறக்குறைய, 650 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் இந்த ராட்சத உயிரினம் உலாவித் திரிந்திருக்கின்றது. அப்போது, இவைதான் பூமியில் மிகப்பெரியதும் கொடூரமானதுமான உயிரினமாக இருந்துள்ளன. இந்த உயிரினத்தில் இரண்டு பிரிவுகள் இருந்துள்ளன. ஒன்று; மாமிசங்களை விரும்பி உட்கொள்வனவாகவும் மற்றையது; தாவரங்களை விரும்பி உட்கொள்பவையாகவும் இருந்துள்ளன. இதில் மாமிசத்தை விரும்பி உட்கொள்பவை கொடூரமானவை.

மிக அதிகமான எடை, மாறிவந்த காலச்சூழல் போன்றனவற்றாலேயே டைனோசர்கள் மடிந்திருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால், 1980 இல் லூயிஸ் அல்வரேஸ் என்ற புவி ஆராய்ச்சியாளர் ஓர் ஆய்வு செய்தார். அதன்படி, 650 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவான நில அடுக்குகளில் 'இரிடியம்' என்ற தனிமம் அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இரிடியம் என்பது பூமியில் மிக அரிதாகக் காணப்படும் தனிமம் ஆகும். விண்கற்களிலேயே இந்தத் தனிமம் அதிகமாக உள்ளது. எனவே, பூமியை நோக்கி விழுந்த விண்கற்களின் மூலம்தான் பூமிக்கு இரிடியம் வந்திருக்கக்கூடும் என்று லூயிஸ் கூறியுள்ளார்.


குறிப்பிட்ட அந்தக் காலகட்டத்தில் பல மைல் அகலமுடைய ஒரு ராட்சத விண்கல் ஒன்று அல்லது பல விண்கற்கள் பூமியில் மோதியிருக்கலாம்; அந்த மோதலால்தான் டைனோசர்கள் அழிவைச் சந்தித்திருக்கக்கூடும் என்று லூயிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், இன்றைய பறவைகளும் டைனோசர்களில் இருந்து பரிணாமித்தவையே. எனவே, விண்கற்களின் மோதலால்தான் டைனோசர்கள் முற்றிலும் அழிந்து போயின என்பதை ஏற்க முடியாது என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர்.





# சூரியனில் வெடிப்பு




பூமியில் இருந்து சூரியன் வெகு தூரத்தில் இருப்பதால் சூரியனிலிருந்து மிகக் குறைந்த அளவு வெப்பமே பூமிக்கு வருகிறது. இதனால்தான் பூமியில் உயிரினங்கள் வாழ முடிகின்றன. பூமிக்கு வரும் சூரியனின் வெப்பம் கொஞ்சம் அதிகரித்தாலும்கூட, அது பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும். இந்த நிலையில், அண்மையில் சூரியனின் மேற்பகுதியில் அணுகுண்டு வெடிப்பது போல இரு தடவைகளுக்கு மிகப் பெரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் முதல் வெடிப்பு பூமி உருண்டையின் அளவைவிடப் பெரிய அளவில் இருந்துள்ளது. அடுத்து சில நிமிடங்கள் கழித்து இரண்டாவது வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அது முதலாவது வெடிப்பைவிட சற்று சிறியதாக இருந்துள்ளது. இதை அமெரிக்க நாஸா விஞ்ஞானிகள் நவீன தொலைக்காட்டி மூலம் படம்பிடித்துள்ளனர். வெடிப்பால் ஏற்பட்ட சூரிய வெப்பத்தை 'சூரிய சுனாமி' என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.




# 2015 இல் போயிங் விண்வெளிச் சுற்றுலா

அமெரிக்காவின் ஹூஸ்டன் பகுதியில் உள்ள போயிங் விமான நிறுவனம் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விமானங்களைத் தயாரித்து பல நாடுகளுக்கு விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில், போயிங் நிறுவனம் விண்வெளிக்கு வணிக நோக்கத்தில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்ல 'ஸ்பேஸ் அட்வென்ஞ்சர்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

அதன்படி, நாஸாவின் உதவியுடன் விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்ப 'சிஎஸ்டி-100' ரக விமானத்தை அது தயாரிக்கிறது. இந்த விமானம் 7 பேர் அமர்ந்து செல்லும் வகையில் இருக்கும். இந்த பயணத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை பயணிகள் பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



நாஸா விண்வெளி வீரர்களின் உதவியுடன் இந்த விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ள போயிங் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. 2015 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த விண்வெளிப் பயணத்தில் கலந்துகொள்ள இப்போதே சிலர் முன்பதிவுகளைச் செய்துகொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

3





## சரியான விடையில் கோடிடுக

4

1. நவரத்தினத்தில் அடங்காதது;
(முத்து, காரீயம், புஷ்பராகம்)
2. பஞ்சபாண்டவர்களில் ஒருவர்;
(நகுலன், கர்ணன், பரதன்)
3. 'கண் வளர்தல்' எனும் மரபுத்தொடர் குறிப்பது;
(விழித்தல், நித்திரை செய்தல், கோபித்தல்)
4. தென்னையின் இளங்காய்;
(கச்சல், நுங்கு, குரும்பை)
5. எஜமாட்டி என்பதன் எதிர்ப்பாற்சொல்;
(எஜமாளன், எஜமான், எஜமாட்டன்)
6. சிங்கம் என்பதன் ஒத்தகருத்துடைய சொல்;
(அரி, கரி, பரி)

## A, B, C, D, E எனக் குறிக்கப்பட்டுள்ள உருக்களை இலக்கமிடப்பட்டுள்ள பகுதியில் இருந்து இனங்கண்டு இணையுங்கள்

1





## ஆங்கிலப் பதம் தருக

5

1. கறிவேப்பிலை - ................................
2. கொய்யாப்பழம் - ................................
3. மூங்கில் - ................................
4. நெல் - ................................
5. வெள்ளைப்பூண்டு - ................................


## கூட்டுக

2




## அறிவுக்கு விருந்து 284 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**



**போட்டி: 04**

1. இடிபாடு - சிதைவு
2. ஊதியம் - சம்பளம்
3. கோரிக்கை - வேண்டுகோள்
4. மேன்மை - உயர்வு
5. நாள் - தினம்

**போட்டி: 05**

*(3, 1, 5, 2, 6, 4 என்ற ரீதியில் இலக்கங்கள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்)*

உலகப் புகழ்பெற்ற சார்ள்ஸ் டிக்கன்ஸ், சிறுவயதில் பத்திரிகைகளுக்கு ஏராளமான கதைகளை எழுதி அனுப்பினார். ஆனால், அவற்றில் ஒன்றுகூடப் பிரசுரமாகவில்லை. அவர் அனுப்பும் கதைகள் திரும்பி வருவது தொடர்ந்துகொண்டே இருந்தது. ஒருநாள் சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு பத்திரிகையில் அவரது கதை பிரசுரமாகிவிட்டது. அந்த மகிழ்ச்சியை டிக்கன்ஸால் தாங்க முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் விட்டவாறு இரவெல்லாம் உறங்காமல் தெருக்களைச் சுற்றிக்கொண்டிருந்தார். ஆரம்பத்தில் இவர் எழுதிய கதைகளுக்கு அன்பளிப்புகளோ, பணமோ கிடைக்கவில்லை. ஆனால், டிக்கன்ஸ் புகழ்பெற்ற பின்னர் பத்திரிகை ஆசிரியர்களும் நூல் வெளியீட்டாளர்களும் அவரது ஒவ்வொரு வார்த்தையையும் கணக்கிட்டு-சன்மானம் கொடுத்து-போட்டி போட்டு அவரது கதைகளைப் பிரசுரித்தனர்.




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 284 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.மயூரன், 238, தெல்தோட்டை வீதி, கலஹா.

**போட்டி: 02**
எ.கிறிஸ்டா,
7 ஆம் வட்டாரம், யூட் வீதி, பேசாலை.

**போட்டி: 03**
எஸ்.சிமர், 665/B, மக்கள்புரம், புத்தளம்.

**போட்டி: 04**
டி.ராஜகுமாரன், கிறீன்வூட் டிவிஷன்,
இம்புல்பிட்டிய.

**போட்டி: 05**
பி.சப்னா, 55/1, முத்தூவ மாவத்தை, இரத்தினபுரி.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.ரஷாத், ஹபுகஸ்தலாவ.
- உ.வத்ஷலன், கொழும்பு-10.
- மொஹம்மட் நஸீப், திஹாரி.
- தெய்விகா கருணாநிதி, கொக்குவில்.
- ஜுமானா ஹஸீன், சாய்ந்தமருது-11.
- எம்.எச்.அஜ்வாத், மாவனல்லை.
- க.அனோஜிதன், திருகோணமலை.
- சு.மாதவி, சண்டிலிப்பாய்.
- ஸாரா அக்ரம், வெலிகம.
- விபுஷனா கிருஷாந்திக்கா, கொழும்பு-02.




'விஜய்'யில் வெளியாகிய 'சிறுகதைகள்', 'இராமாயணம்' என்பன எமக்கு மகிழ்ச்சி ஊட்டும் விடயங்களாக அமைந்துள்ளன.'சங்கிலி மன்னன் வரலாறு' பாடசாலைக் கல்விக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

**-ஆர்.அபினையா, கோளாவில் விநாயகர் ம.வித்.,கோளாவில்-01.**

உன்னில் பிரசுரமாகும் அனைத்தும் தரமானவையே. 'வாரம் ஒரு நாடு' பகுதியில் இலங்கையைப் பற்றியும் பிரசுரமாக்கினால் நன்றாக இருக்கும். மாணவர் ஆக்கத்திற்கு நான் அதிகமான கதைகளை அனுப்பியுள்ளேன். அவற்றைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**-எஸ்.அஸ்மா, மீவளதெனிய, ஹந்தஸ்ஸ.**

★ ***'வாரம் ஒரு நாடு' பகுதியில் ஆசிய நாடுகள் என்ற தலைப்பிற்குட்பட்ட நாடுகளின் வரிசையில் இலங்கை பற்றிய தகவல்கள் பிரசுரமாகிவிட்டன. ஒவ்வொருவரும் அனுப்பும் ஆக்கங்கள் தரங்காணப்படும் பட்சத்தில் அவை 'விஜய்'யில் நிச்சயம் பிரசுரமாகும். (ஆ-ர்)***

'தீமைகளை ஒழிக்கும் தீபாவளி' பற்றிய ஆக்கம் சிறந்த பல தகவல்களைத் தாங்கி வந்திருந்தது. 'பறவைகளுக்காக பட்டாசைத் தவிர்க்கும் கிராமம்' ஆச்சரியமானதும் சுவாரஸ்யமானதுமான தகவலாக அமைந்தது.

**-எம்.சிறிகாந்தன், மீசாலை வடக்கு, கொடிகாமம்.**

கடைசிப் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த கணினி தொடர்பான தகவல்களும் 'Google' பற்றிய தகவல்களும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. எனக்கு மிகவும் விருப்பமானதுறை கணினித்துறையாகும். எனவே, இன்னும் பல்வேறு தகவல்களை வாராவாரம் வழங்குமாறு வேண்டுகிறேன்.

**-எம்.ரிமாஸ், அந்நூர் புர, பாணகமுவ.**

'அனைவரும் அறிந்திருக்க வேண்டிய சட்டம்', 'மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்கள்', 'தீபாவளி', 'Google', 'தெரிந்து கொள்ளுங்கள்' போன்ற ஆக்கங்களுடாக அளவுகடந்த அறிவினைப் பெற்றேன்.

**-ந.சிந்து, கல்நாட்டியகுளம்,வவுனியா.**

ஒவ்வொரு வாரமும் விஜய்யை வாசித்து மிகுந்த பயன்களைப் பெறுவேன். 'தீமைகளை ஒழிக்கும் புனித தீபாவளி' எனது மனதைக் கவர்ந்த ஓர் ஆக்கமாக விளங்கியது. 'மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்கள்', 'அனைவரும் அறிந்திருக்க வேண்டிய சட்டம்' ஆகிய ஆக்கங்கள் எனக்கும் எனது பாடசாலை சக மாணவர்களுக்கும் கல்வித் தேடலுக்கு சிறந்த பரிசாக அமைந்தது.

**-இமாஸ் அஹ்மட், அந்நூர் மு.ம.வித்., கபுவத்த.**




'விண்வெளியில் தெரியாத பல விடயங்களை அறியத்தந்தமைக்கு நன்றி. 'அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள்', 'மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்கள்' போன்ற ஆக்கங்களும், ஓவியம் வரைவதில் ஆர்வமற்ற எனக்கு ஓவியம் வரைய ஆர்வமூட்டிய 'ஓவியம் வரைவோம்' எனும் பகுதியும் மிகவும் பிடித்திருக்கின்றன.

**-எஃப்.அஸ்மா, தரம்-9, முஸ்லிம் ம.வித்., வெளிமடை.**

**இந்த இதழில் (17.11.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 24.11.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 21

அரியாலையூர் சி.சிவதாசன்

பறங்கியர் அங்கே கோட்டையில் கூடிக் கதைக்கும்போது இங்கே வெற்றிப் பெருமிதத்தில் சங்கிலி மன்னன் களிப்புற்றிருக்க, காக்கை வன்னியன் சங்கிலியைக் காண நல்லூர் அரண் மனைக்கு வந்தான். தன் திட்டமெல்லாம் தவிடு பொடி ஆனதே என மனத்துள் எண்ணிய போதும் சங்கிலி மன்னனைக் கண்டு மனதில் நயவஞ்சகத்துடன் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தான்.

அந்தக் காக்கைவன்னியனின் உண்மை நிலை புரியாத சங்கிலி மன்னன் "காக்கை வன்னியரே! நான் போர் உதவி உம்மிடம் கோரியிருந்தும் நீர் ஏன் எமக்கு உதவ முன்வரவில்லை? உங்கள் படைகளையாவது அனுப்பியிருக்கலாமே" என வினவினான்.

"மன்னிக்க வேண்டும் மன்னா! கடல் கொந்தளிப்பாயிருந்ததால் படைகளை அனுப்ப முடியவில்லை. அதுதவிர, வேறெந்தக் காரணமும் இல்லை" என சமாளித்தான் காக்கைவன்னியன். வந்தவன் நல்லூரில் சில நாட்கள் தங்கி

**போர்த்துக்கேயப் பறங்கி பிரகன்சா காக்கைவன்னியனைக் காண வந்திருந்தான். வந்தவன் புன்னகைத்தான். அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டான். இதுவரை செய்த உதவிக்காக அவனை மெச்சினான்**

விருந்துண்டு அமைச்சன் அப்பாமுதலியையும் அவனின் மருமகனும் அமைச்சனுமாகிய பரநிருபசிங்கனையும் கண்டு இந்தச் சங்கிலியை எப்படியும் நாம் அழித்தே தீர வேண்டும். அதற்கான திட்டம் ஏதுமிருந்தால் மறைக்காமல் தனக்குக் கூறும்படி கோரினான். அதன்பின்னர் அவன் தன் அரசுக்குத் திரும்பினான்.

அங்கே அவன் சென்று சிறிது நேரம் ஆறுதலாக இருக்கவில்லை. போர்த்துக்கேயப் பறங்கி பிரகன்சா காக்கைவன்னியனைக் காண வந்திருந்தான். வந்தவன் புன்னகையுடன் காக்கைவன்னியனைக் கட்டியணைத்து முத்தமிட்டான். இதுவரை செய்த உதவிக்காக அவனை மெச்சினான்.

"காக்கைவன்னியரே! நீர்செய்த உதவியை எங்கள் மேலதிகாரிகள் வெகுவாகப் புகழ்ந்தனர். கோவையிலிருக்கும் எம் மேலதிகாரிகளுக்கும் உம்மைப் பற்றிக் கடிதம் எழுதியுள்ளனர். அவர்கள் நீர் கேட்கும் அளவிற்குச் சன்மானம் வழங்குமாறு கூறியுள்ளார்கள். நண்பரே! சண்டை பிடிப்பதால் பயனில்லை. வேறு ஏதாவது மார்க்கம் இருக்கின்றதா? அந்தச் சங்கிலி மன்னன் அரசாட்சியில் இருக்கும்வரை உங்களுக்கும் எங்களுக்கும் நிம்மதி இல்லை. எனவே, ஏதாவது புதிய யோசனை உம்மிடமுண்டா? அல்லது உம் நண்பர்களான அப்பாமுதலி, பரநிருபசிங்கன் ஆகியோரிடம் உண்டா? சொல்லும்" என்றான்.

"நண்பரே! உங்கள் இழப்புக்கள் எங்களை வேதனைக்கு உள்ளாக்கியது. நீங்கள் கூறுவதைப் பார்த்தால் சங்கிலியை போரிலே வெல்ல முடியாது என சொல்லுவது போல இருக்கின்றது. எனினும் யாழ்ப்பாண மண்ணை நீங்கள் பிடிக்க வேண்டும். சங்கிலி மன்னனையும் கொல்ல வேண்டும். இதுவே உங்கள்



## சங்கிலியை தனியாக வரவழைத்து தாக்கச் சதி!

திட்டமானால் ஓர் உபாயம் மட்டும் சொல்லுவேன். நல்லூரில் எமக்கு ஆதரவான சிலரை எம் பக்கம் சேர்க்க வேண்டும். அந்த ஆதரவான வீரர்களுடன் உங்கள் வீரர்களும் அப்பாமுதலி, பரநிருபசிங்கன் வீடுகளில் யாருக்கும் தெரியாமல் மறைந்திருக்க வேண்டும். அப்பாமுதலியாரின் மகள் மன்னன் சங்கிலியின் விருப்புக்குரியவள். அவளை அவன் காண வரும்போது, தனிமையில் வருவான்" என்றதும் பிரகன்சா குறுக்கிட்டான், "சங்கிலியின் வருகையை நாம் எப்படி அறிவது?"

***மங்கையவள் சங்கிலியைக் காண விரும்புவதாக தோழி மூலம் பொய்ச்செய்தியை அனுப்புவோம். அதனை அப்பாமுதலியைக் கொண்டே நிறைவேற்றலாம். செய்தி கிடைத்த சங்கிலி தனிமையில் வரும்போது அவனை மடக்கிப் பிடித்து விடலாம்" என்றான் காக்கைவன்னியன்***

"அவசரப்படாதே பிரகன்சா நான் சொல்வதைக் கவனமாகக் கேளும்" மங்கையவள் சங்கிலியைக் காண விரும்புவதாக தோழி மூலம் பொய்ச்செய்தியை அனுப்புவோம். அதனை அப்பாமுதலியைக் கொண்டே நிறைவேற்றலாம். செய்தி கிடைத்த சங்கிலி தனிமையில் வரும்போது அவனை மடக்கிப் பிடித்து விடலாம்" என்றான் காக்கைவன்னியன்.

ஆச்சரியத்தோடு பிரகன்சா காக்கை வன்னியனைப் பார்த்தான். "காக்கை வன்னியா! உன் மூளையை மெச்சுகின்றேன். திட்டத்தை உடனடியாகவே செயற்படுத்த வேண்டும். அதற்கான ஒழுங்கை நல்லூரில் இருக்கும் நம் நண்பர்களுக்குத் தெரியப்படுத்து, தேவையான பொன், பணம் இந்தப் பையுள் இருக்கிறது. எடுத்துக்கொள். இவை மட்டுமல்ல; காரியம் நிறைவேறுமானால் இன்னமும் அள்ளி அள்ளி வழங்குவோம்" என்றான் பறங்கி பிரகன்சா. பிரகன்சா சென்றதும் செய்தி காக்கைவன்னியனின் நம்பிக்கைக்குரிய ஒற்றன் மூலம் அப்பாமுதலிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. செய்தி அறிந்த அப்பாமுதலி மிகுந்த சந்தோஷத்தில் திளைத்தான்.

(தொடரும்...)

# கிருமிநாசினியைக் கண்டுபிடித்தவர்



கிருமிகள் எளிதில் பரவக் கூடியவை. இவற்றின்மூலம் பல்வேறு நோய்த் தொற்றுக்கள் ஏற்படுவது நாம் அறிந்ததே. இந்தக் கிருமிகள் பரவாமல் தடுக்க கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி வருகிறோம். குறிப்பாக மருத்துவமனைகளில் இந்தக் கிருமிநாசினிகளின் பயன்பாடு அதிகம். இந்தக் கிருமிநாசினியைக் கண்டுபிடித்தவர் ஜோசப் லிஸ்டர் என்பவராவார்.



இவர் 1861 ஆம் ஆண்டு கிளாஸ்கோ மருத்துவமனையில் ரணச் சிகிச்சை மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் அங்கு அறுவைசிகிச்சை செய்து கொண்ட நோயாளர்களில் பலர் இறந்து போனதைக் கண்டு மனம் மிக வருந்தினார். சிலரின் உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு வெட்டி எடுக்கும் நிலை ஏற்பட்டதையும் அவதானித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் லூயிஸ் பாஸ்ட்டர் எழுதிய கட்டுரையொன்றைப் படித்தார் லிஸ்டர். பால் மற்றும் மாமிசம் கெட்டுப் போவதற்கு கிருமிகள் காரணமாக இருக்கலாமென பாஸ்டர் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். லூயிஸ் பாஸ்டர் பிரான்சைச் சேர்ந்த பிரபல ரசாயன நிபுணராவார். இவரின் கட்டுரையை வாசித்த லிஸ்டர் நோய்த்தொற்றுக்கு கிருமிகளே காரணமாக இருக்கலாம் என்னும் அடிப்படையில் ஆராய்ச்சிகளை நடத்தினார். இவற்றைத் தடுப்பதற்கு லிஸ்டர் கார்போலிக் அமிலத்தைப் பயன்படுத்தினார்.



அத்துடன், ஒருவருக்கு அறுவை சிகிச்சை செய்யப் பயன்படுத்திய கருவிகளை கார்போலிக் அமிலத்தில் கழுவிய பின்னரே அடுத்த நோயாளிக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் லிஸ்டர் வலியுறுத்தினார். சத்திரசிகிச்சைக்குப் பின்னர் நோய் பரவினால் அந்தப் புண்ணில் நேரடியாகக் கார்போலிக் அமிலத்தை ஊற்றுவதன் மூலம் கிருமிகளைக் கொல்லமுடியுமென்றும் நிரூபித்தார்.

இந்த முறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதன் பின்னரே இறப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்தது. தற்போதும் இந்த கிருமிநாசினிகளின் பயன்பாடு மிக அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

1827 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி பிறந்த லிஸ்டர் 1912 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி தனது 84 ஆவது வயதில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ipad க்கு போட்டியாக T-Touch pad



அப்பிள் நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப் பட்டுள்ள Apple ipad டெப்லட் கணினிக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. இத்தகைய நிலையில் Apple ipadக்கு போட்டியாகப் பல நிறுவனங்கள் விதவிதமான தயாரிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த வரிசையில் அவுஸ்திரேலியாவின் முன்னணி நிறுவனமான 'டெல்ஸ்ட்ரா' நிறுவனம் இந்த மாதம் (நொவெம்பர்) புதிய கணினியொன்றை அறிமுகப்படுத்துகின்றது. தொடுகைத் திரை (Touch Screen) அமைப்பிலான இந்தக் கணினியானது Telstras T-Touch Tab என்று பெயரிடப்பட்டுள்ளது.

Apple ipad இல் உள்ள அனைத்து வசதிகளையும் இந்த Telstras கணினி கொண்டுள்ள அதேவேளை, கைப்பேசியாக தொழிற்படும் தன்மையையும் கொண்டுள்ளதே இதன் மேலதிக சிறப்பாகும். அவுஸ்திரேலியாவில் மிகவும் குறைந்த விலையில் வாங்கக்கூடிய வகையில் சந்தைப்படுத்தப்படுகின்ற இந்த Telstras கணினியானது விடியோ, தொலைபேசி வசதி, எஸ்.எம்.எஸ் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சூரிய ஒளியில் இயங்கும் 'கீபோர்ட்'



சூரிய ஒளியில் இயங்கக்கூடிய புதிய வகைக் கணினி Keyboard ஒன்று அறிமுகமாகியுள்ளது. Logitech wireless solar keyboard K 750 என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் எந்தவொரு வயர் தொடர்புகளும் இன்றி சூரிய ஒளியில் இயங்கக்கூடிய ஸோலர் பவர் (Solar Power) மூலம் இயங்குவதாகும்.

இருப்பினும், நீங்கள் ஓர் அறைக்குள் இருந்தவாறு கணினியை இயக்குகின்றீர்கள் என்றால் சூரிய ஒளி படாத அந்த அறைக்குள் எவ்வாறு இந்த keyboard இயக்க முடியும் என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம். ஆனால், இருளில் வைத்து இதனை இயக்கினாலும் அதனை இயக்கமுடியும் என்று இந்த நிறுவனம் தெரிவிக்கின்றது. அதாவது, ஒரு தடவை இந்த 'ஸோலர் பவர்' ஒளித்தட்டை சூரிய ஒளியின்கீழ் வைத்தால் அப்போது பெறப்பட்ட சூரிய ஒளியைக்கொண்டு மூன்று மாதங்களுக்கு இந்த keyboard ஐ இயக்கமுடியும். 'ஸோலா பவர்' மூலம் உள்ளீர்க்கப்படுகின்ற சூரிய ஒளியின் சக்தியானது இதில் காணப்படுகின்ற மின் கலத்தில் சேமிக்கப் படுகின்றது. பின்னர் அந்த மின்கலத்தின் மூலம் மேற்படி keyboard இயக்குகின்றது.

சுற்றுச்சூழலை மாசடையச் செய்யாத இந்த 'கீபோர்ட்' PVC இல்லாமல் தயாரிக்கப்பட்டதாகும். ஆகவே, மீள் வலுவேற்றல் மூலம் இதனைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையும் இதன் சிறப்பம்சமாகும்.

மனதைக் கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த 'கீபோர்ட்' முதன்முதலில் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலுமே அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இதன் தற்போதைய விலை 80 அ.டொலர்கள் ஆகும்.

# குறைந்த விலைக்கு 'டெப்லட்' கணினி

ipad டெப்லட் கணினியின் ஆகக்குறைந்த விற்பனை விலை 499 அ.டொலர்களாகும்.



அவ்வாறே, Galaxy Tab கணினியின் விலை 400 அ.டொலர்களாகும். இருப்பினும், சாதாரண வருமானம் உள்ளவர்களுக்கு இத்தகைய தொகையைச் செலுத்தி இவற்றை வாங்கமுடியாத காரணத்தால் அனைவரும் வாங்கக்கூடிய குறைந்த விலையிலான 'டெப்லட்' கணினியொன்றை Acer என்ற நிறுவனம் நொவெம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்துகின்றது. இந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான லென்ஸி, 'மேற்படி கணினியானது நியூயோர்க் நகரில் வைத்து அறிமுகப் படுத்தப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

விலைக்கேற்ற வகையிலான வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ipad கணினியானது ஏனைய ipad களைவிட, விலையில் குறைந்ததாகவே காணப்படும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. அதுமட்டுமன்றி, இதன் திரையானது 5 அல்லது 6 அங்குலத்தைக் கொண்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, நொவெம்பர் மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 17, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org